

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


ஆனி – ஆடி

ஜுலை – 2020

மலர் 9 இதழ் 7


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 8 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| தமிழ் பாகவதம் | 16 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 18 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ – 26 | 20 |
| கொரோனா – காஞ்சி பீடத்தின் உதவிப் பணிகள் | 22 |
| ஸ்ரீ மடம் முகாம் நிகழ்ச்சிகள் | 25 |
| ஸ்ரீ ல-தா ஸஹஸ்ரநாம ஹோமம் | 29 |
| அம்ருதஸித்தியோக தேவீ பாராயணம் | 31 |
| புராணக்கதை | 35 |
| மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 37 |
| ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி | 38 |
| வேதாந்த ஸாரம் | 40 |
| மகாபாரத சுருக்கம் | 41 |
| அத்வைத வினா – விடை | 43 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 45 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

டாக்டர் G. சங்கரநாராயணன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் ம.வே.பசுபதி

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## *ப்ராம்மணா ப்ராம்மணா ?*

''காட்மென்'' என்னும் வெப் சீரியல் தடை செய்யப்பட்டது ஏன்? இதில் ப்ராம்மணர்களை தரக்குறைவாகப் பேசப்பட்டுள்ளது. பல முக்ய முன்னணிகளும் ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமியும் எதிர்ப்பதைத் தொடர்ந்து இது நிறுத்தப்படுகிறது. கடந்தமாதம் நடந்த ஒரு கூத்து.

வருடாவருடம் இம்மாதிரி கூத்துக்கள் நடைபெறுவது வழக்கம். இவ்வருடம் இம்மாதம் இந்த கூத்து. ஒவ்வொரு கூத்துக்கும் பதில் சொல்லவேண்டிய அவஸ்யமில்லை ஆயினும் பலமாக இவ்விஷயங்களை எதிர்க்க வேண்டும். சுமார் 40 வருடங்களுக்கு நடந்த இம்மாதிரி விஷயம் எதிர்ப்பு இல்லாமல் இருந்ததால் சுடர் விட்டு ப்ரகாசித்தது. கொஞ்சம் ரோஷம் வந்து அவ்வப்போது எதிர்ப்பு நடைபெறும் அவ்வளவே.

இந்த நிகழ்ச்சிகளினால் இரண்டு விஷயங்கள் புலப்படுகின்றன.

1. கருத்து சுதந்திரம் எனும் பெயரால் யாரையும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம்.
2. Secular எனும் போர்வையில் ஹிந்து மதமும் ப்ராம்மணர்களும் தரக் குறைவாக விமர்சிக்கப்படுவர்.

இதுபற்றி மீடியாக்கள் மௌனம் சாதிக்கும். மாற்று மதங்களைப் பற்றி பேசினால் அவ்வளவுதான் மீடியாக்கள் பொங்கி எழும். பேசினவன் இருப்பானா என்பது ஐயமே. அந்த வெப் சீரியலில் ப்ராம்மணர்களை அயோக்யர்கள் என்று திட்டுவதாக சொல்லப்படுகிறது. சமுதாயத்தில் அயோக்யர்களும், யோக்யர்களும் இருப்பார்கள். சிலரை வைத்து ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சாடுவது தவறு. எது எப்படி இருப்பினும் தற்கால ப்ராம்மணர்களின் நிலை என்ன? சற்று பார்ப்போம்.

ஒரு நூறு வருடங்களுக்கும் முன் இருந்த ப்ராம்மணனின் ப்ராம்மணத்துவம் இன்று போய்விட்டது. தன் ஆசாரத்தில் பிறழாது மற்றவர்களையும் அதன்படி நடக்க வைத்த அந்தணன் மறைந்துவிட்டான்.

**''ஏதத் தேசப்ரஸூதஸ்ய ஸகாசாத் அக்ரஜன்மன:**
**ஸ்வம் ஸ்வம் சரித்ரம் சிக்ஷேரன் ப்ருத்வ்யாம் ஸர்வ மானவா:''**

இந்த தேசத்தில் பிறந்த அந்தணர்கள் உலகெக்கெல்லாம் வழிகாட்டியாக வாழ்க்கைப் பாடத்தைச் சொல்லுவர் என்பது மனு வசனம்.

இப்படிப்பட்ட உயர்ந்த வாழ்க்கைக்குக் காரணமென்ன? கர்மானுஷ்டானமும் வேத அத்யயனமும்தான் என்றால் மிகையாகாது. Orthodoxy, semi orthodoxy ஆக இருப்பவர்களைத் தவிர்த்து எத்தனைபேர் கர்மானுஷ்டானங்களைச் செய்கின்றனர்? வீண் விவகாரங்களில் ஈடுபடுவது, தன் நிலைக்கு மாறாக செயல்களைச் செய்வது இவை நிச்சயமாக அவப்பெயரைத் தரும். தகுதியில்லாதவர்களின் ஏச்சை ஏற்க நேரிடும். தன் கர்மானுஷ்டங்களைச் செவ்வனே செய்யும் ப்ராம்மணர்களே அவமதிக்கப்படும்போது வெறும் ப்ராம்மண ஜன்மா அடைந்து அனுஷ்டானம் இல்லாமல் இருப்பது எவ்வளவு பாபம்.

மற்ற எல்லாவற்றிற்கும் நேரம் இவர்களுக்கு உண்டு. சுமார் அரை மணி நேரம் கர்மானுஷ்டானம் செய்ய நேரமில்லை. எதுவுமே வேண்டாம் ஸந்த்யாவந்தனம் செய்து காயத்ரியை வழிபாடு செய்தாலே போதும். தன் க்ஷேமம் மட்டுமில்லை லோகக்ஷேமமும் உண்டாகும். ரிஷிகள் சுலபமாக கலியுகத்திற்காக பாதை காட்டியிருக்கிறார்கள். நமக்கு அவர்களால் அனுக்ரகிக்கப்பட்ட வேதம் என்னும் பொக்கிஷத்தை புறக்கணித்து விட்டோம். கனியிருப்ப காய்களை தேடுகிறோம்.

அண்மையில் ஒரு ப்ரபலமான நபரைப்பற்றி படிக்க நேர்ந்தது. அவர் ப்ரபல சினிமா இயக்குனர், கம்யூனிஸ்டாக இருந்து காந்திவழியில் தடம் பதித்தவர். வெற்றிகரமான படங்கள், நல்ல பணம், வசதியான வாழ்க்கை இருப்பினும் தன் வாழ்வில் அந்தணர்க்கு உரிய கர்மாக்களை விட்டதில்லை என்று எழுதியிருந்தது திகைத்து விட்டேன். மேலும் நம் ஸனாதன தர்மத்தைப்பற்றி பல நூல்கள் எழுதியிருக்கிறார் என்பதும் ஆச்சர்யத்தைக் கூட்டியது.

எனவே தவறு நம் பக்கம் தான். நமது கடமைகளிலிருந்து நழுவிவிட்டோம், மாபெரும் மணியை இழந்து விட்டோம். மற்றவர்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடம் கொடுத்துள்ளோம். வ்யஷ்டி உபநயனம், ஸமஷ்டி உபநயனம் எல்லாம் வெறும் சடங்காகிவிட்டன. அவைகளின் தாத்பர்யத்தை யாரும் உணரவில்லை. ஒவ்வொரு யுகத்திலும் வேதத்திற்கு அபாயம் வரும். பகவான் அவதரித்து அதைக் கப்பாற்றுவார். கலியுகத்தில் அரக்கர்கள் ரூபத்தில் சிலர் ஏசுவார்கள். மாற்றி உரை செய்வார்கள். இவைகளை முறியடிக்க வேண்டுமாயின் ப்ராம்மண சமுதாயம் தன் கர்மானுஷ்டானங்களை விடக்கூடாது. உலகத்தை விட்டு ஒதுங்கியும் இருக்க

வேண்டாம் எல்லாரும் இன்புற்றிருக்க தூஷணையிருந்தாலும் ப்ராம்மணன் ப்ராம்மணனாக இருத்தல் அவஸ்யம்.

**தூஷிதோபி சரேத் தர்மம் யத்ர யத்ர ஆஸ்ரமே ரத :**

தூஷிக்கப்பட்டாலும் எந்த ஆஸ்ரமத்திலிருந்தாலும் தர்மத்தைச் செய் என்பது மனு வசனம். பிறப்பொழுக்கம் கெடாமல் அந்தணர்கள் அறவோர்களாக இருக்க வேண்டும் அதுவே அவர்களின் தலையாய கடமை என்று மீண்டும் வலியுறுத்தி இதற்காகவே அனவரதம் பாடுபட்ட ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.

## ராமாயண பண்டிதர் மறைந்தார்

நம் காமகோடி ப்ரதீப வாசகர்களுக்கு பரிசயமான ராமாயணம் ஸ்ரீனிவாசன் தன் 92 ஆவது வயதில் ராமபதம் ஏகினார் என்பது மனவருத்தம் தரும் செய்தியாகும். **கே. வி. ஸ்ரீனிவாசன்** எனும் பெயர் கொண்ட இவர் தமிழக வணிகத்துறை அலுவலராக ஓய்வு பெற்றார். மகாபெரியவாளிடம் மிகுந்த பக்தியுடையவர். அவரால் ராமாயணம் என்று அழைக்கப்பட்டவர். அதிலிருந்து **ராமாயணம் ஸ்ரீனிவாசன்** என்னும் பெயர் நிலைத்துவிட்டது. எளிமையானவர், துரந்தர வித்வான், ஆழ்ந்த புலமை, வித்யாசமான கோணங்கள் இவை இவருடைய சிறப்புகள். 1966 லிருந்து பல உபன்யாஸங்களை நிகழ்த்தியவர். பல ராமாயண மாநாடுகளில் பங்கேற்றவர் பல ஆராய்ச்சி கட்டுரைகளை வழங்கியவர். ராமாயணத்தை அலசி ஆராய்ந்து அவர் எழுதியவை ஏராளம். ராமாயணம் மட்டுமல்ல, வேதங்கள், ஸ்ரீமத் பாகவதம் மகாபாரதம், ப்ரம்மஸூத்ரம் இவைகளுக்கு சிறந்த முறையில் விளக்கம் அளித்தவர். ஸ்ரீவைஷ்ணவராயினும் அத்வைதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு. சிவ விஷ்ணு அபேதி. ஓய்வு நாட்களை எப்படி உபயோகமாகச் செய்து கொள்ளுவது என்பதற்கு இவர் ஓர் உதாரணம்.

நம் மடத்தின் மூன்று பெரியவர்களிடமும் நன் மதிப்பைப் பெற்றவர் இன்று நம்மிடையே இல்லை என்பது ஆஸ்திக உலகுக்கு நஷ்டம். ஜாதஸ்ய த்ருவோ ம்ருத்யு: என்பதை ஏற்றுக் கொண்டு ராம பதம் சென்ற அவர் ஆன்மா சாந்தி அடைய ப்ரார்த்திப்போம்.

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## C ¸ Á øPa \¢u [ PÒ



சற்றுமுன் சொன்னாற்போல் ஜாதி சந்தஸ்களில் இன்னொரு விசேஷம், நாலு பாதங்களில் ஒவ்வொன்றும் ஒரே எண்ணிக்கையுள்ள மாத்திரைகள் கொண்டதாக இருப்பதில்லை.

வ்ருத்தம் என்று உயிரெழுத்துக்களைக் கொண்டு கணக்கு பண்ணுவதிலும்கூட பாதத்துக்குப் பாதம் அக்ஷர வித்யாஸமுள்ளதாயும் சில மீட்டர்கள் உண்டுதான். எல்லாப் பாதமும் ஒரே அளவான அக்ஷரம் கொண்டது ஸம வ்ருத்தம். இப்படியில்லாமல் முதல் பாதத்திலும், மூன்றாம் பாதத்திலும் ஒரே அளவு அக்ஷரங்களும் அதற்கு வித்யாஸமாக இரண்டாம் பாதத்திலும், நாலாம் பாதத்திலும் ஒரே அளவான அக்ஷரங்களும் கொண்ட மீட்டர்களும் உண்டு. இவற்றை அர்த்த ஸமவ்ருத்தம் என்று சொல்வார்கள். ஒவ்வொரு பாதமுமே வேறு வேறு எண்ணிக்கையில் அக்ஷரங்கள் கொண்ட மீட்டர்கள்கூட இருக்கின்றன. இவை 'விஷம வ்ருத்தம்' எனப்படும். 'அதென்ன விஷமம்?' என்றால் வி-ஸமம் என்பதே விஷமம். 'ஸம'தத்துக்கு எதிரானது 'வி-ஸமம்'. எல்லாப் பாதமும் ஸமமான அக்ஷரம் கொண்டதாயில்லாமல் இருப்பதால் 'விஷம வ்ருத்தம்' என்று பெயர். யாரைப் பற்றியோ விஷமமாகப் பாடுவது என்று அர்த்தமில்லை!

விஷமம் என்ற வார்த்தை 'மிஸ்சீஃப்' என்று அர்த்தம் கொடுப்பதற்குக் காரணம் கூட, அது ஸமநிலையில் அதாவது நடு நிலையில் இருந்து கொண்டு, உள்ளதை உள்ளபடிச் சொல்லாமல் வெளியிலே ஒரு அர்த்தமும் உள்ளுக்குள்ளே திரிசமனாக இன்னொரு அர்த்தமும் கொடுக்கும்படியாகப் பேசுவது அல்லது கார்யம் செய்வதாக இருப்பதுதான். 'திரிசமன்' என்கிறபோதும் அது ஸமமாக இருப்பதைத் திரிப்பது என்று பொருள்படுவதாகவே தோன்றுகிறது.

இரண்டால் வகுத்து ஸம பாதிகளாக ஈவு கொடுக்காத ஒற்றைப்படை எண்களையெல்லாம் 'விஷமம்' என்பார்கள். ஐந்து, மூன்று ஆகியவை ஒற்றைப்படை எண்கள்தானே? ஆகையால் ஐந்து புஷ்ப பாணங்களை உடைய மன்மதனை 'விஷமசரன்' என்றும், முக்கண்ணான பரமேச்வரனை விஷம நேத்ரன் என்றும் சொல்வதுண்டு.

இங்கிலீஷில் odd, even என்றபோதும் even என்பது இரட்டைப் படையை மட்டுமில்லாமல் even- minded என்பதில் ஸமநிலையான மனஸைக் குறிப்பிடுகிறது. ஒற்றைப் படையைக் குறிக்கும் odd என்பது விஷமம் (மிஸ்சீஃப்) என்று அர்த்தம் தராவிட்டாலும் அதற்குக் கிட்டே உள்ள 'விசித்ரமான', 'fanciful' என்ற அர்த்தங்களையும் தருகிறது. 'ஆட் பிஹேவியர்', 'ஆட் எக்ஸ்ப்ளனேஷன்' என்று சொல்லும் போது!

வ்ருத்தங்கள் பெரும்பாலும் ஸமமாயிருப்பவைதான். அர்த்த, ஸம விஷம வ்ருத்தங்கள் அபூர்வமே. ஆனால் ஜாதிகளிலோ வரிக்குவரி (பாதத்துக்கு பாதம்) மாத்ரைகளின் எண்ணிக்கை வித்யாஸமாயிருப்பதே பொது வழக்கமாயிருக்கிறது. உதாரணமாக 'ஆர்யா'வில் முதல் பாதம், மூன்றாம் பாதம் ஆகிய இரண்டில் தலைக்குப் பன்னிரண்டு மாத்ரைகள் இருக்க வேண்டும். இரண்டாம் பாதத்தில் பதினெட்டு மாத்ரை இருக்கணும். கடைசியான நாலாவதில் பதினைந்து.

நம்முடைய ஷட்பதீ ஸ்தோத்ரத்தின் ச்லோகங்கள் ஆர்யா ஜாதியில் அமைந்தவைதான்.

அதன் முதல் ச்லோகத்தை எடுத்துக் கொண்டால் முதல் பாதம் அல்லது வரி: அவிநய மபநய விஷ்ணோ.

மாத்திரைக் கணக்குப் பண்ணினால், 'அ-வி-ந-ய-ம-ப-ந-ய' என்ற மட்டும் அநுஸ்வாரம், விஸர்கம், அடுத்தாற்போல் ஒன்றுக்கு மேற்பட்ட மெய்யெழுத்து என்கப்பட்ட எதுவுமில்லாமல் சுத்தமான குறில்களாக இருக்கின்றன. அதனால் இந்த எட்டுக்கும் எட்டு மாத்திரை. அப்புறம் 'விஷ்ணோ' என்று வருவதிலுள்ள 'வி' மட்டும், அது குறிலாக உள்ள போதிலும், அதன் பின்னால் ஷ், ண் என்ற இரண்டு மெய்யெழுத்து வருவதால், நெடிலைப் போல இரண்டு மாத்திரை பெற்றுவிடுகிறது. முதலில் சொன்ன எட்டு மாத்திரை ப்ளஸ் இரண்டு. அதாவது பத்து. 'ஷ்ணோ' என்பதில் 'ஓ' என்ற நெடில் வருகிறது. அதற்கு இரண்டு மாத்திரை, மொத்தம், முதல்வரியில் பத்து ப்ளஸ் இரண்டு, அதாவது பன்னிரண்டு மாத்திரை.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### வாத்து தந்த தங்க முட்டை

***உழைப்பின் மூலம் சிறிது சிறிதாகச் சேமிப்பது நிலைத்த சந்தோஷத்தையும், தன்னம்பிக்கையும் தருகிறது. திடீர்ப் பயணம் வானவில் போல் மறைகிறது. தான் மறையும் போது நம்மிடமிருந்த தன்னம்பிக்கையையும் மறைத்து விடுகிறது.***




ஒரு குடியானவன் அழகான வாத்துக்குஞ்சைக் கண்டான். அதன் அழகில் மெய்மறந்து அன்புடன் வளர்த்தான். அதுவும் வளர்ந்தது. ஒருநாள் அது முட்டையிட்டது. முட்டையின் ஓடு தங்கமாக மின்னியது. நல்ல விலை கொடுத்து ஒரு செல்வந்தன் அந்த அழகான முட்டையை வாங்கிச் சென்றான். அது மிகவும் சுவையுடனிருந்தது. அந்த செல்வந்தன் அந்த வாத்து இடும் முட்டைகளைத் தானே வாங்கிக் கொள்வதாகவும், நல்ல விலை தருவதாகவும் உறுதி தந்து அதன்படி செய்தான். குடியானவனுக்கு நல்ல வருமானம் கிட்டியது.

ஒருநாள் செல்வந்தன் அந்த வாத்தை தனக்கு விற்று விடும்படி கேட்டான். நல்ல விலை தருவதாகவும் சொன்னான். செல்வந்தனுக்கு ஆயிரம் ஆயிரமாகக் கொடுத்து அதனை வாங்குவதில் நஷ்டமில்லை. ஆனால் குடியானவனுக்கு அந்த ஆயிரம் ரூபாய்கள் பெரிதாகத் தோன்றியது. தினந்தோறும் முட்டைக்கென அதிக விலை பெறுவதை விட ஒரே தடவையாக, ஆயிரக்கணக்கில் பணம் பெறுவதைப் பெரிதென நினைத்தான். 'வாத்து முட்டையிடுவதை நிறுத்தி விட்டாலோ, வாத்து இறந்தாலோ, வாத்தைத் திருடன் பறித்துச் சென்றாலோ வாத்தால் கிடைக்கின்ற வருமானம் நின்றுவிடுமே' என்ற கவலை அவனை வாட்டியது. நல்ல விலை பெற்று அதனைச் செல்வந்தனுக்கு விற்று விட்டான்.

திடீரென வந்த பணம் திடீரெனச் செலவாகி விட்டது. இன்று அவன் ஓர் ஏழை. நிலைத்த வருமானம் கொடுத்த வாத்தைப் பேராசையால் இழந்தோமே என்று வருந்தினான். திடீரெனப் பணக்காரனாக நேர்ந்தபோது வந்த மகிழ்ச்சியைவிட அந்த பணம் எல்லாம் செலவாகித் தான் ஏழையானதுதான் அதிக வருத்தம் தந்தது.

ஒரு பொருளைப் பெறாமலிருப்பதால் மனம் வருந்துவதில்லை. பெற்றதை இழந்து விட்டாலும், பெற்றதை இழக்க நேருமே என்று கவலைப்பட்டாலும் மனிதன் அதிகம் வருந்துகிறான். கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைவதே நிலைத்த மகிழ்ச்சியைத் தரும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. பேராசை பெரும் நஷ்டம். இதனை அந்தக் குடியானவன் பெரும் இழப்பிற்குப் பின்னரே உணர்ந்தான்.

(தொடரும்



## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜூன் விடைகள்

1. ஒரிசா க்ருஷ்ணர்
2. நமி நந்தி அடிகள்
3. ஆத்ரேய கோத்ரம்
4. பரதப்புழா
5. வெள்ளை வாரணர்
6. நகர விடங்கர்
7. அர்ஜுனன்
8. ரிஷி, சந்தஸ், தேவதா
9. யத் மனுரவதத் தத் பேஷஜம்
10. நிமி

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜூலை வினாக்கள்


1. விஷ்ணு ஸஹஸ்ர நாமங்களுக்கு உரை தந்த வைஷ்ணவர்
2. யஜுர் வேதத்தின் கோத்ரம் எது
3. புல்லாங்குழல் இசைத்து சிவனை வழிபட்டவர்.
4. நாகபட்டினத்தில் விளங்கும் விடங்கர்
5. அம்மனின் அர்த் நாரி பீடம்
6. ப்ரபோத சந்த்ரோத்யம் எழுதியவர்
7. நெரூர் தொடர்புடைய அவதூதர்
8. உடம்பில் ஜீர்ணம் செய்யும் அக்னி
9. மதுரை மீனாக்ஷி அம்மனுக்கு தங்க அனக்வடிகள் தந்த ஆங்கிலேயர்
10. கதைகள் இல்லாமல் விளங்கும் புராணம்

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## தமிழ்ப் புத்தாண்டு அனுக்ரஹ பாஷணம்

*சித்திரை மாதத்தில் இருந்து பங்குனி மாதம் வரையிலே, சைத்திர மாதத்தில் இருந்து பால்குனி மாதம் வரையிலே செளர மாதப்படியும், சாந்திரமானப்படியும், பல உற்சவங்களை, பண்டிகைகளை, விரதங்களை, பூஜைகளை, ஈஸ்வர பக்தியை வளர்ப்பதற்காகவும், ஆஸ்திகத்தை வளர்ப்பதற்காகவும், விசேஷ அனுக்ரகத்தை பெறுவதற்காகவும், பஞ்சாங்கங்களின் வழிக்காட்டுதலின்படி கொண்டாடி வருகிறோம். அதன்படி இந்த புது வருஷ செளரமான யுகாதியை வைதீகமான, சாஸ்திரியமான முறையிலே அனுஷ்டானம் செய்வதும், பூஜை போன்ற உற்சவாதிகளையும், தேவதைகளை ப்ரீத்தி செய்யக் கூடிய தேவதா, ரிஷி, பித்ருக்கள் ஆகியோர்களை நினைவுபடுத்தி, கெளரவப்படுத்தி, ஸ்ரத்தா, பக்தியுடன் பூஜிக்கக் கூடிய அந்த அனுஷ்டானத்தையும் நாம் செய்ய வேண்டும்.*



*ஸுப்ரபாதம், ப்ரபாதம் என்றால் காலை நேரம். ஸு ப்ரபாதம்-நல்ல காலை நேரம். இந்த வருஷப் பிறப்பானது நமக்கு நல்ல பலன்களை அளித்துக் கொண்டே இருக்க வேண்டும். நல்லதைப் பார்ப்பது என்பது ஒரு வழக்கம். அது கேரள தேசத்திலே விசேஷமாகவும், நம் பிரதேசத்திலே, இந்த விஷு தரிசனம் என்பது ஒரு பழக்கத்திலே இருந்து வருகிறது. நல்லதைப் பார்ப்பது, நல்லதைக் கேட்பது. காலையிலே எழுந்தவுடன்...*

**கராக்ரே வஸதே லக்ஷ்மீ; கரமத்யே சரஸ்வதி**
**கரமூலே து கௌரீ ஸ்யாத் ப்ரபாதே கரதர்சனம்**

என்பதாக நம்முடைய உள்ளங்கையிலே துர்கா, லக்ஷ்மி சரஸ்வதி தேவிகள், த்ரிசக்திகள் -நல்ல வாக்கை கொடுக்கக் கூடிய சரஸ்வதி, நல்ல ஐஸ்வரியத்தை தரக் கூடிய மகாலட்சுமி, நல்ல விஷயங்கள் செய்வதற்கும், தடங்கல் இல்லாமல்,தைரியத்துடன், நாம் விளங்குவதற்கான சக்தியை அளிக்கக்கூடிய துர்கா தேவி -இப்படி இந்த மூன்று சக்திகளை த்யானம் செய்வது என்பது ஒரு சம்ப்ரதாயத்திலே சுப்ரபாதமாக இருந்து வந்தது. அதே போன்று பல கோவில்களிலேயும், மடத்திலேயும் கோ பூஜை என்பது வழக்கமாக இருந்து வருகிறது. சௌகரியப்பட்ட நேரத்திலே, சௌகரியப்பட்ட இடத்திலே கஜ பூஜையும் நடைபெறுகிறது.

**தேஹி ஸௌபாக்யம் ஆரோக்யம் தேஹிமே பரமம் சுகம்**
**ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோ தேஹி த்விஷோ ஜஹி**

சங்கடத்தில் இருந்து விடுபட்டு, நல்லதைப் பெறுவோம் என்கிற பிரார்த்தனையோடு, ஸௌபாக்ய திரவியங்களை தரிசனம் செய்கிறோம். அதே போன்று, ஸ்ரீரங்கம் போன்ற கோவில்களிலேயும், சுப்ரபாத சேவைகள் என்பதாக, கோபூஜை முதலான பல்வேறு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே இந்த வருஷப் பிறப்பு சந்தர்ப்பத்திலேயே, ச்ரமங்களில் இருந்து நீங்கி, மக்களும் இருக்கக் கூடிய இடத்திலே, சிறிது காலம், தற்காப்புக்காக இருக்க வேண்டிய முறையிலே அவர்களும், பத்திரமாக, நல்ல விதமாக, அவரவர்களின் கர்மானுஷ்டானங்களை செய்து கொண்டு, நல்ல பிரார்த்தனைகளையும் செய்து கொண்டு, தனக்காகவும் சரி, தன் குடும்பத்திற்காகவும் சரி, தான் வசிக்கக் கூடிய தேசத்திற்காகவும் சரி, லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து என்கிற விதத்திலே, உலகத்திலே இருக்கக் கூடிய நம்மவர்கள், உலகத்திலே இருக்கும் அனைவர்களும் நம்மவர்கள் என்கிற, லோக கல்யாணத்திற்காக, உலகத்திற்கு நன்மை ஏற்பட வேண்டும் என்கிற பிரார்த்தனையும் செய்து

**ஸ்வஸ்தி ப்ரஜாப்ய பரிபாலயந்தாம்**
**ந்யாயேன மார்கேன மஹீம் மஹீஷா:**
**கோப்ரம்மணேப்ய: சுபமஸ்து நித்யம்**
**லோகா: ஸமஸ்தா: சுகினோ பவந்து**

இதுதான் தமிழிலேயும் யான் பெற்ற இன்பம் இந்த வையகமும் பெற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்திலே விசேஷமாக பாராயணம் செய்யக் கூடிய பகவன் நாமாக்களையெல்லாம் பாராயணம் செய்து, நவக்ரஹ தேவதைகள் ; இந்த வருஷப் பிறப்பு தினத்திலே, கோள்கள், நவக்கிரக சஞ்சாரங்கள் என்பது நமக்கு நல்ல பலன்களையே அளிக்க வேண்டும் என்கிற -அவை நல்ல நல்ல என்கிற பிரார்த்தனையோடு, அதே சமயத்திலே, இந்த சந்தர்ப்பத்திலே செய்ய வேண்டிய, செய்யக் கூடிய பொதுக் காரியங்களையும், அல்லது குடும்பத்தின் நிகழ்ச்சிகளிலேயும் வைதீகத்திற்கும், பாரம்பரியத்திற்கும் முக்கியத்துவம் அளித்து, தொண்டும் செய்து, தொடர்ந்து செய்யும் பொதுவான, மிகவும் அத்யாவசியமானவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நல்ல முறையிலே அன்புடனும், அன்யோன்யமாகவும், மக்கள் இந்த சமயத்திலே, தேச பக்தியுடனும், தெய்வ பக்தியுடனும்,சமுதாய விழிப்புணர்வுடனும், இந்த இன்னல்களில் இருந்து மீண்டு, மீண்டும் சிறப்பான காரியங்கள் செய்வதற்கான பிரார்த்தனைகளையும் பிரயத்னங்களையும் செய்ய வேண்டும்.

***ஆரோக்கியம் பிரததாது நோ தினகர:*** - அந்த சூரியனானவர் ஆரோக்கியத்தை அளிக்கட்டும்.
***சந்த்ரோ யசோ நிர்மலம்*** - அப்பேர்ப்பட்ட பொருளை சந்திரன் அளிக்கட்டும்.
***பூதிம் பூமி ஸுத:*** - ஐஸ்வரியத்தை செவ்வாய் கிரகமானது அளிக்கட்டும்.
***ஸுதாம்சு தனய:*** - குரு கௌரவம் -அந்த சந்திரனுடைய, பூதியை அளிக்கட்டும்
***ப்ரஜ்ஞான் குரு:*** நல்ல புத்தி சக்தியை ப்ருஹஸ்பதி பகவான் குரு அளிக்கட்டும்.
***கௌரவம் காவ்ய:*** -நல்ல மதிப்பை குரு அளிக்கட்டும்.

நல்லதையே பேசுவோம், நல்லதையே நினைக்கட்டும் என்ற விதத்திலே, மனதிற்கு கல்மிஷத்தை ஏற்படுத்தாத, நல்ல வாக் விலாசத்தை, நல்ல பேச்சுகளை, நல்ல திறமைகளை சுகம் அளிக்கட்டும். சனீஸ்வர தேவதா கிரகம் எப்பொழுதும் சந்தோஷத்தை அளிக்கட்டும். ராகு பாஹு பலம் -உடலிலே நமக்கு எதிர்ப்பு சக்திகளை, ஆரோக்கியத்தை ராகு அளிக்கட்டும். நமக்கு முன்னேற்றங்களுக்குத் தடையாய் இருக்கக்கூடிய ச்ரமங்களை நீக்கி ராகுவானவர் பலத்தை அளிக்கட்டும். கேதுவானவர் நமது குலத்திற்கு, நமது தேசத்திற்கு வளர்ச்சியை, மேன்மையை அளிக்கட்டும். ஆகவே பக்தர்கள் அனைவரும், இந்த புத்தாண்டை நல்ல பக்தி ச்ரத்தையுடன் கொண்டாடி, அந்த குருவின் அனுக்ரஹத்துடன் தேவதைகளுடைய அனுக்ரஹத்துடன், மேன்மேலும் நல்ல பணிகளிலே ஈடுபடுவதற்கான நல்ல சக்தியை, அம்பாள் அனுக்ரஹத்தோடு பெற்று மேன்மேலும் பெறுவதற்கும் முயற்சிக்க வேண்டும்.

***ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர***

# ஸ்ரீ சங்கர ஜயந்தி குறித்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அருளுரை

சங்கர ஜெயந்தி உற்சவம் வைகாச சுக்ல பஞ்சமி அன்று வரக்கூடியது. இந்த கலியுகத்திலே, பரமேச்வரனுடைய அவதாரமாக கேரள தேசத்திலே, காலடி என்னும் கிராமத்திலே அவதாரம் செய்து, முப்பத்திரண்டு வயதுக்குள், பாரத தேசம் முழுவதும், அதாவது பாரத தேசத்தை ஒட்டி இருக்கக்கூடிய நேபாளம் தேசம் உட்பட, பல இடங்களுக்கும் பாதயாத்திரையாகவே சென்று, பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள், ஐம்பத்தொரு சக்தி பீடங்கள், பல புண்ணிய நதிகள், பல மோக்ஷபுரிகள், கிராமங்கள், மலைகள், இப்படி, எப்படி சூரியனுடைய ஒளி அனைவருக்கும் வெளிச்சத்தை அளிக்கிறதோ, சந்திரனுடைய கிரகணங்கள் எப்படி சந்தோஷத்தை அளிக்கின்றனவோ, எப்படி சமுத்திரத்தை பார்க்கும் போது, யானைகளைப் பார்க்கும் போது, குழந்தைகளைப் பார்க்கும் போது சந்தோசம் அதிகரித்துக் கொண்டு வருகிறதோ, அந்த விதத்திலே ஆதிசங்கரருடைய தவத்தின் மூலமாக சஞ்சாரத்தின் மூலமாக, உபதேசத்தின் மூலமாக,அவர்களுடைய தபோ பலத்தின் மூலமாக, அன்பான அறிவுரையின் மூலமாக, அவர்கள் எழுதி இருக்கக்கூடிய ஸ்தோத்திரங்கள் மூலமாக மக்கள் மனதிலே நல்ல பண்புகள் வளர்க்கப்பட்டு, உலகம் என்பது எந்த அளவிற்கு உண்மையானது, உண்மையற்றதல்ல அதே நேரத்திலே முழுதும் உண்மையானது அல்ல என்கிற பிரம்ம சத்யம், ஜகன் மித்யா என்கிற, பார்க்கக்கூடிய நேரத்திலே இருக்கக் கூடிய உண்மைத் தன்மை-அந்த உண்மையை மூன்று விதமாகப் பிரித்து-பிராதிபாஸிக சத்தியம், வ்யவஹாரிக சத்யம், பாரமார்த்திக சத்யம்- என்பதாக அந்த உண்மையை மூன்று விதமாகப் பிரித்து, பார்க்கும் நிலையிலேயே அது நிலையற்றது, உண்மையற்றது என்பது பிராதிபாஸிக சத்தியம்.ஒரு சிறிது காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு இருக்கக் கூடிய சத்யம் என்பது வ்யவஹாரிக சத்யம், தாம் பழகக் கூடிய நேரத்திற்கு உண்மை என்கிற நிலையிலே அது உண்மைத்தன்மை. நிரந்தரமான, எப்பொழுதும் மாறுதலற்ற -நேற்று, இன்று, நாளை மூன்று காலத்திலேயும், எப்பொழுதும் மாறுதலற்ற உண்மை (பாரமார்த்திக சத்யம்) ஒரு பரம்பொருளின் உண்மையை மூன்று நிலையிலும், மூன்று விதமான உண்மைத் தன்மையைப் பற்றி உலகிற்கு எடுத்துச் சொல்லி, தேசிய, தெய்வீக ஒருமைப்பாடு, காணா ப்பத்தியம், கௌமாரம், வைஷ்ணவம், சௌரம், சைவம், சாக்தம் என்கிற அறுவகை சமயங்களை ஒன்றுபடுத்தி, வேதத்தின் அடிப்படையிலே, சாத்திரங்களின்

அடிப்படியிலே, நம்முடைய சனாதன இந்து தர்மத்தை வலுப்படுத்தி, கன்யாகுமரி முதல் காஷ்மீரம் வரையிலே, காத்மாண்டு வரையிலே, கேதார்நாத் வரையிலே, காமாக்யா வரையிலே இருக்கக் கூடிய இந்த சனாதன ஒற்றுமை ; கலாசாரம் என்பது இந்திய நாட்டை ஒற்றுமைபடுத்தி தர்ம, அமைதி வழியிலே அழைத்துச் செல்கிறது.

மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆச்சாரிய தேவோ பவ, அதிதி தேவோ பவ, சத்யம் வத, தர்மம் சர, -இது போன்ற சுருக்கமான, சாராம்சமான வாழ்க்கையின் உபதேசங்களை வேதம் நமக்கு எடுத்துச் சொல்லி, அதன் மூலம் இந்த நாட்டிலே, lifestyle-வாழ்க்கை என்பது எப்படி அமைய வேண்டும் என்பது -அன்பானதாகவும், அறவழியிலேயும், பரந்த மனப்பான்மை கூடியதாகவும் இருக்க வேண்டும். எந்தப் பொருளாதார நிலையிலே நாம் இருந்தாலும், எந்தப் பிரதேசங்களிலே நாம் வசித்தாலும், பக்தியையும், அடக்கத்தையும் நம்முடைய தேவைக்கு உகந்த, நம்முடைய கடமைக்கு உகந்த விருப்பங்களையும், தர்மத்தின் அடிப்படையிலே சிறந்த வாழ்க்கை முறையை அமைத்துக் கொடுத்து இருப்பது இந்த தர்மங்கள்.

தர்மத்தைப் பரப்புவதற்காக பல விதத்திலேயும் முயற்சியை மேற்க்கொண்டு -இன்றைய தினமும் காத்மாண்டு சென்றால், ஆதிசங்கரர் வழியிலே, அங்கு ஆன்மீக வழிபாட்டு முறைகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதைப் பார்க்கும் பொழுது, உலகம் ஒரு குடும்பம், வசுதெய்வ குடும்பகம் என்கிற தத்துவத்தை அந்த சிறிய வயதிலே, ஆதிசங்கரர் பகவத்பாதர்கள் சாதனை செய்ததை பார்க்க முடிகிறது. அந்த ஜெயந்தியை நல்ல முறையிலே அவரவர்கள் இருக்கக் கூடிய இடத்திலே கொண்டாடி, எங்கு விமர்சையாக செய்வதற்கு இந்த நேரம் இடம் கொடுக்கவில்லையோ, இது போன்ற சூழ்நிலைகளிலே, பிறகு வரக்கூடிய சுக்ல பக்ஷ பஞ்சமி அன்று கொண்டாடி, நல்ல முறையிலே -சங்கரம் லோக சங்கரம்-அந்த ஆதி சங்கரர் இந்த முக்தி தரும் நகர் ஏழில் முக்கியமாம், இந்த காஞ்சி நகரில், வந்து, ஸ்ரீ சக்கரம் ஸ்தாபனம் செய்து, பல்வேறு உபதேசம் அளித்து, இன்றைய தினமும் பல்வேறு கோவில்களிலே, அந்த ஆதிசங்கரர் பகவத்பாதர்களுடைய சின்னங்களை பல இடங்களிலேயும் காண முடிகிறது. அதையெல்லாம் கண்டுபிடித்து உலகிற்கு பிரசித்தி செய்த பெருமை நம்முடைய மகாஸ்வாமி அவர்களைச் சேரும். பல இடங்களுக்கும் சென்று, வியாச சாந்தாலீஸ்வரர் என்ற கோவில்களிலேயும் இருக்கக் கூடிய அந்தப் பெருமையை உணர்த்தி, இன்றைய தினம் இங்கிருந்து சிவாஸ்தானம் என்கிற தேனம்பாக்கத்திலேயும், பிரம்மபுரீஸ்வரர் என்கிற இந்த வேதவதிக் கரையிலே அமைந்து இருக்கக்கூடிய இந்த க்ஷேத்திரத்திலே, காஞ்சி புராணத்தின் மகிமைகள்

கூடிய இந்த க்ஷேத்திரத்திலே, கர்பக்ரகதிலே அந்த ஆதிசங்கர பாகவத்பாதர்கள், பார்வதி பரமேஸ்வரர்களை துதிக்கக்கூடிய, போற்றக்கூடிய, வழிபாடு செய்யக்கூடிய, உட்கார்ந்த கோலத்திலே இருக்கக்கூடிய அந்த அருமையான சிற்பம், இந்தக் கோவிலிலே அமைந்து இருப்பது மிகுந்த விசேஷமானது. இந்த இடத்திலே நம்முடைய பெரியவர்கள், பலகாலம் தங்கி, பல்வேறு தர்ம காரியங்களை உற்சாகப்படுத்தி, நம்முடைய அறவழிக் கல்வியை மக்களுக்கு பிரச்சாரம் செய்து, சஹஸ்ரலிங்கம் என்று சொல்லக் கூடிய ஒரே லிங்கத்திலே ஆயிரம் லிங்கத்தை உருவாக்கி, அந்த சஹஸ்ரலிங்கம் ஆயிரம் லிங்கமானது மிகப் பெரிய லிங்கம். கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சங்கமிக்கக் கூடிய பிரயாகை க்ஷேத்திரத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டு, அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கக் கூடிய லிங்கமானது, இந்த தேனம்பாக்கத்திலே, வேத பாராயணத்துடன் அந்த சிவலிங்கம் தயார் செய்யப்பட்டு, அந்த சிற்பிகள் அந்த சிவலிங்கத்தை வடிக்கும்போது வேத பாராயணமும் நடைபெற்று, பெரியவரின் முன்னிலையிலே நடைபெற்று, அந்த கங்கைக் கரையிலே மிக அழகாக, மிக கம்பீரமாக, புனிதமாக அந்த சஹஸ்ரலிங்கம் இன்றைய தினமும் தரிசனத்திற்கு வாய்ப்பாக அமைந்து இருக்கிறது. இப்படிப்பட்ட இந்த சங்கர ஜெயந்தி, பகவத்பாதர்கள் எழுதிய பஜகோவிந்தம், கனகதார ஸ்தோத்திரம், சிவானந்தலஹரி, சௌந்தரியலஹரி -இது போன்ற பல ஸ்தோத்திரங்கள் - முதாகராத்த மோதகம் -என்று ஆரம்பித்து, பல ஸ்தோத்திரங்களை எழுதி இருக்கிறார்கள். பிரச்னோத்தர ரத்தின மாலா என்றும், வாழ்க்கையிலே நாம் கடைபிடிக்க வேண்டிய முன்னுரிமைகள் என்ன? Priorities என்ன? என்பதைப் பற்றி எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். அந்த சங்கர ஜெயந்தி உற்சவத்தை, வேத பாராயணங்கள், பஜனைகள், அன்னதானங்கள் இப்படி, எந்த நேரத்திலே, எந்த விதத்திலே, எந்த அளவிலே முடியுமோ, இந்த நேரத்தை ஒட்டி, எப்படி செய்ய முடியுமோ, அப்படி நல்ல முறையிலே செய்து பிறகு விரிவாகவும் செய்து, இந்த அக்ஷயத் திதியை, புண்ணிய காலத்தையும், சங்கர ஜெயந்தி உற்சவத்தையும் சிறப்பான முறையிலே கொண்டாடி, வளர்ச்சிக்கும், ஞானத்தையும் சிறப்பான முறையிலே பெற்று, அக்ஷயத் திதியின் மூலமாக வளர்ச்சியையும், சங்கர ஜெயந்தியின் மூலமாக தெளிவையும், ஞானத்தையும் பெற்று, மேன்மேலும் அந்த பகவானுடைய அருளைப் பெறும் விதத்திலே, குரு பக்தியை வளர்த்துக் கொள்ளும் விதத்திலே அருளையும், பொருளையும் பெற்று சிறப்பான முறையிலே மேன்மேலும் பக்தி மார்க்கத்திலே, ஆன்மீக மார்க்கத்திலே மேன்மேலும் முன்னேறுவதற்கு பிரார்த்தனையும், பிரயத்தனமும் செய்ய வேண்டும்.

**ஜெய ஜெய சங்கர, ஹர ஹர சங்கர**

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## யானையின் குரல்

14. அப்படிப்பட்ட எல்லா சக்தியின் வடிவமான, உருவமற்றவனான மிகப்பெரிய உருவினனான, வியப்புக்குரியவனான அந்த ப்ரஹ்ம ஸ்வரூபிக்கு நமஸ்காரம்.

15. ஆன்மாவின் உன்னொளியே நமஸ்காரம். உயர்ஸாக்ஷியானவனே, பரமாத்மாவிற்கு, சொற்களுக்கு அப்பாற்பட்ட மனதிற்கும் அப்பாற்பட்ட அவனுக்கு நமஸ்காரம்.

16. இப்படி ஆளை அழைத்த குரல் கேட்டு எம்பெருமான் புறப்பட்ட வேகம் அப்பப்பா சொல்லத்தரம் இல்லை. படுக்கையை விட்டு எழுந்தான். தன் பரிவாரங்கள், ஆபரணங்கள் இவைகளைப் பற்றி கவலைப்படாமல், புறப்பட்ட பிறகும் செல், செல் என்று கருத்மானைச் சொல்பவனாய், பிராட்டியிடமும் சொல்லாமல், கருடன் மீது வந்து முதலையால் பீடிக்கப்பட்ட யானையைக் காக்க அவன் அவசரம் அவசரமாய் வந்தான்.

17. கஜேந்திரனும் பகவானால் காப்பாற்றப்பட்டவனாய் அக்ஞானமாம் பந்தத்தினின்றும் விடுபட்டு பகவத் ஸ்வரூபம் பீதகவாடை, நான்கு கரங்கள் இவைகளுடன் விளங்கினான்.

ஸ்வாமி இந்த கஜேந்திரன் யார்? அவனுக்கு எப்படி ஸாரூப்யம் கிடைத்தது. இவைகளைப் பரீட்சித்து கேட்டான். சுகப்பிரம்மம் சொன்னார்.

18. முன்னொரு சமயம் இந்த்ரத்யும்னன் என்னும் அரசன் பகவானுக்குத் திருவாராதனம் பண்ணியபோது, கடுந்தவத்தால் ஜடைதரித்தவனாய், தபத்தில் மூழ்கி, அச்யுதனை அமைதி நிலையில் தன்னை தன் சூழ்நிலையை மறந்து மலைபோல் ஆச்ரமவாசம் செய்தான்.

19. அப்போது திடீரென்று எதிர்பாராத நிலையில், புகழ்பெற்ற முனிவராம் அகஸ்தியர் தன் சிஷ்யர்களுடன் அப்பக்கம் வந்தார். பகவத் சிந்தனை, தவம் இவற்றில் மூழ்கியிருந்த அரசன் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. அகஸ்தியர் கோபங்கொண்டார்.

20. ததுராத்மா, அந்தணனாம் என்னை அவமதித்தாய். தமோ குணத்தால் குற்றம் இழைத்தாய். எனவே நீ யானையாகக் கடவது என்று சாபம் இட்டார். ''பகவானால் காப்பாற்றப்பட்டு சாபம் தீர்வாய்'' என்றார்.

21. தேவலர் என்ற ரிஷி நீரின் அடியில் ஆழ்ந்து தவம் இருக்க அங்கு ஹூஹூ என்ற கந்தர்வன் கந்தர்வப் பெண்ணை நினைத்து நீர் விளையாட்டில் அவர் காலைப் பிடித்து இழுக்க, அவரது தவம் அதனால் கலைய கோபங்கொண்டு, ஹூஹூவை முதலையாகப் போக என்று சபிக்க அவன் முதலை ஆனான். அவன் தேவலரைப் பிரார்த்திக்க, 'த்ரிகூட மலையில் கஜேந்திரனை காப்பாற்ற பகவான் வருவான். அவன் கை ஆழியால், அறுக்கப்பட்டு நீ பழைய கந்தர்வ உருவம் அடைவாய்' என்று சாப விமோசனமும் சொன்னார்.

குறிப்பு : இந்த கஜேந்திர மோக்ஷத்தை ப்ராதர்த்யான ச்லோகமாக சொல்வதை நம்பூர்வர்கள் நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள்.

நம் ஸ்வாமி தேசிகனும் ''ஸ த்வம் ஏவ ரபஸ'' என்று தொடங்கும் ச்லோகத்தில் அனுவித்துள்ளார்.

ஸம்ஸாரம் எனும் முதலையால் பீடிக்கப்பட்டவர்களாய் நாடோறும் போராட்டத்திலேயே வாழ்ந்து, கொண்டிருக்கும் நம் காரணபூதனான எம்பெருமானை, தொல்லையெல்லாம் நீக்க வரும்படி ப்ரார்த்திப்போம், துயரின்றி வாழ்வோம்.

சுபமஸ்து. (தொடரும்)

## இது இந்தியா

*உலகிலேயே இந்துமதம் தான் சகிப்புத்தன்மையில் சிறந்து விளங்குகிறது. ஏனெனில் அது கூறும் கடவுள் கோட்பாட்டில் உலகில் சாத்யமான அனைத்துத் தெய்வங்களும் அடங்கிவிடும். செரிவு மிக்க மத கோட்பாடுகள், செரிவு இல்லாத மத கோட்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் நயம் மிகுந்ததாகவும், வளைந்து கொடுக்கும் தன்மையுடையதகவும் இந்து மதம் உள்ளது.*

*( ஏ எ வெல்ஸ் ப்ரிட்டனின் இலக்கிய படைப்பாளர்.)*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் – 6

பி. ஆர். கண்ணன்



ஆஸ்தீகர்

ஜரத்காரு என்ற ஒரு முனிவர் விவாகம் செய்துகொள்வதில்லை என்று பிடிவாதமாக இருந்தார்; ஞானமார்க்கத்தை ஆச்ரயித்தவர். ஒரு சமயம் தன் முன்னோர்களின் அழுகைக்குரல் ஒரு பாழுங்கிணற்றிலிருந்து வந்ததைக் கேட்டு, அவர்களுடைய வற்புறுத்தலினால் விவாகம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டார்; இல்லையேல் பூர்வஜர்களைக் கரையேற்றாமல் தவிக்கவிட்ட பாவம் வந்துசேருமே என்று. விவாகத்திற்கு ஒரு நிபந்தனை விதித்தார். பெண், தன் பெயரான ஜரத்காரு என்ற பெயர் கொண்டவளாக இருக்கவேண்டும் என்பதே அது. புத்திரன் பிறந்தவுடன் குடும்பத்தைத் துறந்து வனம் சென்று தபஸ் செய்வேன் என்றும் சொன்னார். வாசுகியின் (நாகம்) தங்கை ஜரத்காருவுடன் அவருடைய விவாகம் நடந்தேறியது. இவர்களுக்கு பிறக்கப்போகும் புத்திரன் ஆஸ்தீகனால் ஸர்ப்பங்களுக்கு நலம் உண்டாகும் என்று பிரம்மதேவர் அனுக்ரகித்திருந்தார். கிருகஸ்தாச்ரமத்தில் ஒரு நாள் ஜரத்காரு முனிவர் தன் பத்தினியின் மடியில் தலை வைத்துத் தூங்கும்போது, ஸாயங்கால ஸந்தியாநேரம் நெருங்கிவிட்டது. இப்போது பத்தினிக்கு தர்மசங்கடம் வந்தது. தூங்கும் கணவரை எழுப்புவது பெரிய பாவம்; ஸந்தியாகாலத்தில் ஸந்தியாவந்தனம் செய்யாமல் தூங்கவிடுவதும் பெரிய பாவம். இப்போது என்ன செய்வது என்று கலங்கிப்போன பத்தினி யோசித்தாள். **தர்மநாஸாத்வரம் த்யாகஃ ததாபி மரணம் த்ருவம் । தர்மஹாநிர்நராணாம் ஹி நரகாய பவேத்புநஃ ।।** ஸந்தியாவந்தன காலத்தை விடுதல் என்ற தர்மநாசத்தைவிட, என் கணவர் கோபித்து என்னை பரித்தியாகம் செய்தாலுங்கூட அதுவே சிறந்தது. ஏனெனில் மரணம் எல்லோருக்கும் நிச்சயம்.

*தர்மத்தை குலைத்தால் நரகம் போவது நிச்சயம். என்றெல்லாம் பலவாறாக யோசனை செய்து கடைசியில் அவள் ஒருவழியாக முடிவெடுத்து, கணவரை எழுப்பிவிட்டாள். கணவரோ கடுங்கோபம் அடைந்தார். காரணம் சொன்னபோது, தான் தூங்கும்போது, அஸ்தமிப்பதற்கு சூரியனுக்கு அவ்வளவு தைரியம் உண்டா என்று கேட்டார். அப்பேர்ப்பட்ட தபஸ்வி அவர். கொந்தளித்த அவரைச் சமாதானப்படுத்த பிரம்மா, சூரியன், தேவர்கள் எல்லோரும் அங்கே வந்து குழுமிவிட்டனர். ஜரத்காரு முனிவர் குடும்பத்தைத் துறப்பேன், வனம் செல்வேன் என்று உறுதியாகப் பேசினார். பிரம்மா, புத்திரன் பிறந்தால் தான் வனம் செல்வேன் என்ற அவருடைய பிரதிக்ஞையை நினைவூட்டவே, தன் பத்தினியின் வயிற்றில் புத்திரன் இருக்கிறான், 'அஸ்தி' என்று கூறிவிட்டு சரேலென்று தபஸிற்குக் கிளம்பிவிட்டார்.*

*'அஸ்தி' என்று அவர் கூறியபின் பிறந்த அவருடைய புத்திரன் தான் 'ஆஸ்தீகர்'. அவருடைய தாயார் ஜரத்காரு சாதாரண ஸ்திரீ அல்ல. தேவியினுடைய அம்சமாக அவதரித்த மனஸா தேவியே அவள். தாயார் குழந்தையை நேரே கைலாஸத்திற்கு அழைத்துப்போனாள். ஸாக்ஷாத் சிவபெருமான் அக்குழந்தைக்கு ஸகலவேதங்களையும் உபதேசித்தார். பெரிய தபஸ்வியாக பின்னர் பிரகாசித்த ஆஸ்திகரின் பெருமை அப்பேர்ப்பட்டது. அவருடைய பெருமையை நாம் மூன்றுவேளையும் செய்யும் ஸந்தியாவந்தனத்தில் வடக்கு நோக்கிச் சொல்லும் மந்திரத்தில் நினைவுகூறுகிறோம். **ஜரத்காரோர் ஜரத்கார்வாம் ஸமுத்பந்நோ மஹாயஸாஃ ந அஸ்தீக ஸத்யஸந்தோ மாம் பந்நகேப்யோ அபிரக்ஷது ।।** என்று.*

*(வளரும்)*

**இது இந்தியா**

**ஆழ்ந்த சிந்தனை சார்ந்த விஷயங்களின் நாடான இந்தியாவின் இலக்கியங்களைப் படிக்கத் துவங்கும் போதே அவற்றோடு பரிச்சயம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் தோன்றி விடுகிறது.**


**(ப்ரெடரிக் ஹெகல் கெர்மானிய தத்துவவியலார்)**

**தத்வ அறிவுக்கு உரிய நுட்பம் மற்றும் தெளிவு ஸம்ஸ்க்ருதம் தவிர வேறு எந்த மொழியிலும், க்ரேக்க மொழியிலும் கூட இல்லை. இந்தியா அறிவு மதம் அரசியல் சார்ந்த விஷயங்களின் பிறப்பிடமாக மட்டுமல்லாமல் அவற்றில் எல்லாம் தலை சிறந்து விளங்குகிறது. அதோடு ஒப்பிடும்போது க்ரேக்க பாரம்பர்யம் வெளுத்து சோகையுடன் உள்ளது.**

**(ப்ரெடரிக் வான் ஷ்லெகல் ஜெர்மானிய தத்வ அறிவாளர்)**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 26

சிவ சந்த்ரசேகரன்



## தேடி வரும் திருவருள்

1942ஆம் வருடம் நான் காசி யத்திரை முடித்துத் திரும்பினேன். அப்போது பெரியவா பூவனூர் க்ராமத்தில் முகாமிட்டிருந்தார்கள். அவர்களைத் தர்சிக்கச் சென்ற போது காலை 8 மணிமுதல் மாலை இரண்டு வரையில் என் யாத்ரை பற்றிக் கேட்டுகொண்டிருந்தார்.

நான் எனக்கு எற்பட்ட அனுபவங்களைக் கூறினேன். ‘‘நீ காசியில் ஆலமரத்தடி யோகியைப் பார்த்தாயோ?’’ என்று வினவினார். நான் பார்க்கவில்லை என்று தெரிவிக்க தனது அனுபவத்தை அவர் கூறினார்.

1932 ஆம் வருடம் ஸ்வாமிகள் காசிக்கு எழுந்தருளினார். நவராத்ரி பூஜையும் அங்கதான். பெரிய பண்டிதர்களும் மதன் மோகன் மாலவ்யாவும் காசிராஜாவும் தினம் பெரியவாளைத் தர்சிக்க வருவார்கள். ஒரு நாள் பண்டிதர்கள் மடத்திற்கு ஒரு மைல்தூரத்தில் இருக்கும் ஆல மரத்தடி யோகியைப்பற்றிச் சொன்னார்கள். அந்த மைதானத்தில் ஓர் ஆலமரம். அதன் நிழலில் பல வருடங்களாக அவர் இருக்கிறர்.

வெளியில் எங்கும் போவதில்லை. உணவு கூட உண்பதில்லை. பால் பழம் எதுவுமில்லை. சிலனாள் பசுவின் சிறு நீறே உணவு. பசுக்களும் கன்றுகளும் அவரைச் சுற்றி இருக்கும். தினவு எடுத்தால் அவரது முதுகில் தேய்த்துக்கொள்ளும். மக்கள் தரும் பழங்களை பசுக்களுக்கு கொடுப்பார். பல்லாண்டுகளாக இதான் வழக்கம்.

*பெரியவா காசிக்கு வந்திருப்பது கேட்டு இரண்டு பண்டிதர்களிடம் தான் அவரைச் சந்திக்க விரும்புவதாயும் அவருக்கு சௌகர்யம் எப்படி என்று கேட்டனுப்பினார். இதைக்கேட்ட பெரியவா அவர் இங்கு வரத்தேவையில்லை தாமே அங்கு இரவு பூஜைக்குப்பின் வருவதாகவும் இதை அவரிடம் தெரிவிக்கவேண்டாம் என்றும் கூறினார்.*

*அன்றைய தினம் இரவு பெரியவா அந்த ஆலமரத்துக்குச்சென்றார்கள். அவரைக் கண்ட யோகி வரவேற்று அப்படியே ஆனந்த பரவசமானார். உடனே வருத்தத்துடன் ஜகத்குருஜி நான் அபராதம் செய்துவிட்டேன். உங்களைக் கால் நோக இங்கு வரவழைத்துவிட்டேன். பண்டிதர்கள் சரியாகச்சொல்லவில்லையா? நானே மடத்துக்கு வந்து தர்சிக்க எண்ணினேன். என் பிழை பொறுக்கவேண்டும் என்றுபுலம்பினார்.*

*பெரியவாளுக்கு அப்போது 40 வயதிருக்கும். யோகி அவருடைய பெருமையை அறிந்ததால்தானே இவ்வளவு பணிவுடன் பேசியிருக்கிறார். கருணாமூர்த்தியான பெரியவா அவரை தன்னருகில் அமரவைத்துக் கொண்டு'' உமது பேரிலோ வித்வான்கள் பேரிலோ எக்குற்றமும் இல்லை. நீங்கள் இந்த மரத்தி அடியிலேயே நிரம்ப நாள் வசிக்கிறீர்கள் என்பதால் உமது ஜன்மவ்ரதத்திற்கு பங்கம் வரக்கூடாது, என்னைப் பார்க்க வெளியில் வரக்கூடாது என்று எண்ணியதால் நானே வந்தேன். அருகில் கங்கை இருந்தாலும் அதைவிட புனிதமான கோதூளியையே பஸ்மமாக அணிகிறீர்கள். சகல தேவதைகளும் குடியிருக்கும் கோமாதா வின் புழுதி மிக விசேஷம். கங்கையைக்காட்டிலும் புனிதமான கோதூலி உங்கள் உடலில் உள்ளது. உமது பாக்யமே பாக்யம்என்று யோகியிடம் மனம் குளிரக் கூறினார்கள். பிறகு யோகி ஆத்ம தத்வங்கள் பற்றி விசாரித்தார். அவற்றிற்கு விளக்கம் அளித்தார் ஜகத்குரு.*

*தன் வ்ரதம் பங்கப்படக்கூடாதென்று எண்ணி வருகைதந்த பெரியவாளுக்கு நன்றி கூறினார். இரவு வெகு நேரத்துக்குப்பின் பெரிவா மடத்துக்கு வந்தார். இந்த யோகியை நீ பார்த்தயோ? என்று பெரியவா கேட்க நான் பார்க்கவிலை என்றேன். மறுபடி காசிக்குச் சென்றபோது அவரைப்பற்றி கேட்டேன். அவரங்கு இல்லை எங்கு போனார் தெரியவில்லை என்றார்கள். இப்படி தவ ஸ்ரேஷ்டர்கள் வாழும் நாடு இது. அவர்கள் மத்தியில் நாம் இருக்கிறோம் என்பதே நமக்குப் பெருமை.*

*(தொடரும்)*

# கொரோனா - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் உதவிப் பணிகள்

*தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு நிலவும் சமயத்தில், வேலை இல்லா நிலைமையால் பாதிக்கப்படாதவர்கள் யாரும் இல்லை என்றே கூற வேண்டும். அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைந்த பட்ச தேவைகளை அளித்து, அவர்களின் பசியை ஒருவாறு போக்குகிறார்கள். ஒரு சில மக்கள், சமூகத்தினர் இந்த தாழ்த்தப்பட்ட குடையின் கீழ் வராதவர்கள்-கோவிலில் வேலை செய்பவர்கள் மற்றும் சனாதன தர்மத்தின் பல விதமான செயல்பாட்டில் உள்ளவர்கள் ஆகியோர் எந்த விதமான உதவியும் கிடைக்காமல் தவித்து வந்தனர். இதனை கருத்தில் கொண்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 70வது பீடாதிபதியான* ***ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி*** *அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தலின்படி ஸ்ரீ மடம் பல விதமான நடவடிக்கை எடுத்து, அதன் மூலம் குறைந்த பட்ச உதவி கிடைக்காத, வாழ்வாதாரம் இல்லாத மக்களுக்கு நிவாரண நிதி அளித்து பல கோணங்களில் இருந்து ஆதரவு அளித்து வருகிறது. ஸ்ரீமடத்தைச் சார்ந்த பல்வேறு அமைப்பின் மூலம் தொடர்ந்து இந்த இக்கட்டான சூழ்நிலையில் பல தரப்பட்ட நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் சில -*

***ப்ரதம மந்திரி பொது நிவாரண நிதிக்கு ரூ. 10 லட்சமும், தமிழக முதல்வர் பொது நிவாரண நிதிக்கு ரூ. 10 லட்சமும் ஸ்ரீ மடத்தின் சார்பில் வழங்கப்பட்டது.***

*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட வைதீக தர்ம ரக்ஷண சபா மூலம் 500க்கும் மேற்பட்ட வேத வித்வான்களுக்கும் ஸ்வச் பாரத் அமைப்பைச் சார்ந்தவர்கள் சுமார் 300 நபர்களுக்கும் ரூ 3000/- உதவித்தொகை வழங்கப்பட்டது.*

*ஸ்ரீமடத்தின் அங்கமான ஸ்ரீ ப்ரத்யக்ஷா சாரிடபிள் டிரஸ்ட் மூலம் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுச்சேரி, திருவாரூர், கும்பகோணம், நாகப்பட்டினம், ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கிராமம் மற்றும் குக்ராமத்தில் உள்ள 1350 அர்ச்சகர்களுக்கு, தலா ரூபாய் 1000 அளிக்கப் பட்டது. காமகோடி பீடத்தின் கீழ் உள்ள அதிஷ்டானம், கோவில்களில் பூஜை செய்பவர்களுக்கும் அளிக்கப்பட்டது.*

*ப்ரோஹித சபா மூலம் நலிந்த ப்ரோஹிதர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 60 ப்ரோஹிதர்களுக்கு தனி நிதிஉதவி அளிக்கப்பட்டது. காஞ்சிபுரத்தில் 70 பேருக்கு மளிகை சாமான்கள் கொடுக்கப் பட்டது.*

மகாலட்சுமி சாரிடபிள் டிரஸ்ட் மூலம் சிற்ப வல்லுனர்களுக்கும், சிற்பக்கூடத்தில் பணிபுரிபவர்களுக்கும் , அதோடு சிவா ,விஷ்ணு கோவிலில் பணிபுரியும் பண்டிதர்களுக்கும், ஓதுவார்களுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டது.

ஸ்ரீ காமகோடி கடிகாஸ்ரமம் டிரஸ்ட் மூலம், மதுரை மாவட்டத்தில் உள்ள பாகவதர்கள், ஓதுவார்கள் மற்றும் அர்ச்சர்கர்களுக்கு நிதி உதவியை அளித்தது திருப்பூர், கோவைப் பகுதியில் ஸ்வச் பாரத் இயக்கத்தில் பணி புரிந்த சுமார் 300 சேவகர்களுக்கு உதவி அளித்தனர்.

மதுரை, திருவிடைமருதூர், சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள சங்கர மடத்தின் கிளை மூலமும், சங்கர மடத்தைச் சார்ந்த நிறுவனங்கள் மூலம் தேவையான மக்களுக்கும், இடம் பெயர்ந்தவர்களுக்கும் உணவு மற்றும் மளிகை சாமான்கள் வழங்கப்பட்டது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சென்னபுரி பக்த ஜன சமாஜம் இடம் பெயர்ந்தவர்களுக்கு தினப்படி கோதுமை மாவு அளித்து உதவியது.

## ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின் 2வது வார்ஷிக ஆராதனை.



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 69வது பீடாதிபதியாக விளங்கிய ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களின் 2வது வார்ஷிக ஆராதனை ஸ்ரீமடத்தில் (காஞ்சீபுரம்) 07.03.2020 அன்று வைதீக முறைப்படி விமரிசையாக கொண்டாடப்பட்டது. 05.03.2020 முதல் சதுர்வேத பாராயணம், வித்வத் ஸதஸ் முதலியன நடைபெற்றன. மாலையில் கர்நாடக சங்கீத இசைக்கச்சேரிகளும் நடைபெற்றன.

ஆராதனை தினத்தன்று காலையில் ஏகாதச ருத்ர ஜப ஹோமம் எடுத்து

வரப்பட்டு ஸ்ரீ பெரியவாள் அவர்களின் ப்ருந்தாவனத்திற்கு ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. முன்னதாக ஸ்ரீ பெரியவாள் ஸ்ரீமடம் முகாமில் (அன்னதானக் கூடம்) 2 கால சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையை முடித்துக் கொண்டு ஸ்ரீமடத்திற்கு வருகை புரிந்த சமயம் பூர்ணகும்ப மரியாதை, மங்கள வாத்யம், வேத கோஷம் முழங்க கோலாகலமாக வரவேற்கப்பட்டார்கள். இந்த ஆராதனைக்கு அக்னிஹோத்ரிகள், நான்கு வேதங்களும் நன்கு கற்றுணர்ந்தவர்கள் என 32 வேத விற்பன்னர்கள் ப்ராம்மணர்களாக வரிக்கப்பட்டு வஸ்திரம் வழங்கப்பட்டது. ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவில் வளாகத்தில் உள்ள புண்யதீர்த்த குளத்தில் அவர்கள் ஸ்நானம் செய்து பசுமாடு, மங்கள வாத்யம், வேதகோஷம், குடை முதலியவைகள் தொடர ஊர்வலமாக ஸ்ரீமடம் வந்தனர். ஆராதனை நியமங்கள் முடிந்து தீர்த்த நாராயண பூஜை நடந்தது. ஸ்ரீ பெரியவாள், ஆராதனை கர்த்தா மற்றும் ஸ்ரீமடம் சிஷ்யர்கள் ப்ராம்மணர்களை 4 முறை வலம் வந்தனர். ஆராதனை ப்ராம்மணர்களுக்கு சன்மானமாக தங்கம், வெள்ளி, பித்தளை சாமான்கள், குடை, ஆசனம், தடி (கம்பு) பாதரக்ஷை ஆகியவைகள் தக்ஷிணையுடன் வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்திருந்து ஆசி பெற்றனர். வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் ஸ்ரீ பெரியவாள் அக்ஷதை ப்ரஸாதம் வழங்கினார்கள்.

ஆராதனைக்கான எல்லா ஏற்பாடுகளையும் தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழக வேந்தர் ஸ்ரீ சேதுராமன் அவர்களின் குடும்பத்தார் சிறப்பாக செய்திருந்தனர்.

ஆராதனை சமயம் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி கோவில் அதிகாரிகள் யாவரும் குடும்பத்துடன் வந்து கலந்து கொண்டார்கள். திருப்பதி வெங்கடாஜலபதி, காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன், ஏகாம்பரேஸ்வரர், குமரக்கோட்டம் முருகன் கோவில், ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி கோவில், தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷி அம்மன் கோவில், ராமேஸ்வரம் ராமநாத ஸ்வாமி கோவில், திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோவில், காசி விஸ்வநாத ஸ்வாமி கோவில் உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு கோவில்களிலிருந்தும் ப்ரஸாதங்கள் வழங்கப்பட்டன.

ஆராதனையை முன்னிட்டு ஸ்ரீ கோவிந்த கிரி தாஸ் அவர்களுடைய சிஷ்யர்கள் 7 நாட்கள் வேதபாராயணம் செய்தார்கள். பாகவத ஸப்தாஹமும் நடைபெற்றது.

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்

*சென்னை விஜயத்தை முடித்துக் கொண்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் 04.03.2020 அன்று இரவு 8.00 மணி அளவில் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவில் அருகேயுள்ள நித்ய அன்னதான கூடத்திற்கு எழுந்தருளிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் சுமார் ஒரு வார காலம் அங்கு தங்கி ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர பூஜையை நடத்தினார்கள்.*

*05.03.2020 காலை 6.00 மணி அளவில் காஞ்சிபுரத்தை அடுத்த செவிலிமேடு அருள்மிகு காமாக்ஷி அம்மன் சமேத ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி திருக்கோவில் கும்பாபிஷேகம். ராகு, கேது பரிகார ஸ்தலமாக விளங்கும் இத்திருக்கோயில் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவில் நிர்வாகத்திற்குட்பட்டது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பங்கேற்று கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்கள்.*

- *அன்று மாலை 5.00 மணி அளவில் ஏனாத்தூர் ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி விஸ்வ மஹா வித்யாலயா நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் 23வது பட்டமளிப்பு விழாவிற்கு தலைமையேற்று ஆசி வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திரு. சுப்ரமண்ய ஸ்வாமி* M.P. *அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரை ஆற்றினார்கள்.*
- *07.03.20 ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை மஹோத்ஸவம்*
- *08.03.20 அன்று தேனம்பாக்கத்தில் நடைபெற்ற சண்டி ஹோம பூர்ணாஹுதியில் ஸ்வாமிகள் பங்கேற்றார்கள்.*
- *11.03.2020 அன்று காலை 6.00 மணி அளவில் காஞ்சிபுரத்தை அடுத்துள்ள தேனம்பாக்கத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ மஹாஸ்வாமிகள் பலகாலம் தங்கி தவம் புரிந்த சிவாஸ்தானத்தில் பூஜையுடன் முகாமை தொடர்ந்தார்கள்.*
- *15.03.2020 அனுஷத்தன்று தேனம்பாக்கத்தில் ஒரு மாபெரும் வேத சதஸ் நடைபெற்றது. வேத பண்டிதர்களும், வித்யார்த்திகளும் பங்குபெற்ற இந்த சதஸில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷணம் அளித்து அனுக்ரஹித்தார்கள்.*
- *18.03.20 - காஞ்சிபுரத்தை அடுத்துள்ள உக்கம்பெரும்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள நட்சத்திர விருட்ச விநாயகர் ஆலயத்தில் புதிதாக ஸ்தாபனம்*

செய்ய ஒருலட்சம் ருத்ராக்ஷங்களால் ஆன சிவபெருமான் விக்ரஹத்தை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கோவில் நிர்வாகக்குழு தலைவர் ஸ்வாமிநாதன் அவர்களிடம் வழங்கினார். இந்த சிவலிங்கத்தின் எடை சுமார் 15 கிலோ ஆகும். அதனைத் தொடர்ந்து கோயிலின் தல வரலாற்று புத்தகத்தை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வெளியிட சி.பி.ஐ. முன்னாள் இயக்குனர் திரு. கார்த்திகேயன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

- *23.03.20 - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 65வது பீடாதிபதிகளான ஸ்ரீ மஹாதேவேந்த்ர சரஸ்வதி (VII) சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆராதனை அவரது ப்ருந்தாவனம் அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டம் இளையாத்தங்குடியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.*
- *26.03.20- யுகாதிப் பண்டிகை - ஸ்ரீமடத்திலும் (ப்ருந்தாவன சன்னதி) மற்றும் முகாமிலும் பஞ்சாங்கப் படனம் நடைபெற்றது. அன்று முதல் வஸந்த நவராத்திரி ஆரம்பம். வழக்கம்போல் யாகசாலைகள் நிறுவப்பட்டு ஸ்ரீவித்யா ஹோமம், ஸ்ரீ ராம சடாக்ஷரி ஹோமம் தினந்தோறும் நடைபெற்றது. ஸ்ரீ வால்மீகி ராமாயண பாராயணமும் செய்யப்பட்டது.*
- *31.03.20 - தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை கருதி உலக மக்கள் நோயிலிருந்து விடுபட ஈச்வரனை அக்னி உபாஸனை செய்து சிறப்பு இஷ்டியாகங்கள் கும்பகோணம் மற்றும் மத்தூர் ஆகிய ஊர்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.*
- *02.04.20 - ஸ்ரீ ராம நவமி - அன்று ஸ்ரீ ராமபிரானின் உற்சவ மூர்த்திக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்து பட்டாபிஷேகத்துடன் வஸந்த நவராத்திரி உற்சவம் முடிவடைந்தது.*
- *14.04.20 - தமிழ் வருடப்பிறப்பு. ஸ்ரீமடம் முகாமிலும், ப்ருந்தாவன சந்நிதியிலும் பஞ்சாங்கப்படனம் நடைபெற்றது. ப்ரதி வருஷம் சென்னை வாழ் பக்தர்களால் செய்யப்படும் விஷுக்கனி அலங்காரம் ப்ருந்தாவன சந்நிதியிலும் ஸ்ரீமடம் முகாமிலும் இனிதே நடைபெற்றது. ஸ்ரீ பெரியவாள் முகாமிலிருந்த ஸ்ரீமடம் சிஷ்யர்களுக்கு ரூபாய் நாணயம் வழங்கி ஆசிர்வதித்தார்கள்.*
- *26.04.20 - அக்ஷய த்ருதியை*
- *28.04.20 - ஸ்ரீ சங்கர ஜயந்தி -*

- *ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் ஜயந்தி சித்திரை மாதம் 15ம் நாள் (28.04.2020) அன்று நாடெங்கிலும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. குறிப்பாக காஷ்மீரத்தில் உள்ள சங்கராச்சார்யர் மலையில் ஸ்ரீ சங்கர ஜயந்தி உற்சவம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு காவல்பணி புரியும் நமது பாரதத்தின் எல்லை பாதுகாப்புப் படையினரால் சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது. இது தவிர சிக்கிம், காலடி, பூரி, மசிலிப்பட்டிணம், கோகர்ணம், பிலாய், பூனா ஆகிய இடங்களிலும் சங்கர ஜயந்தி உற்சவம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் முகாமில் சங்கர ஜயந்தி உற்சவம் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அமைதியாக கொண்டாடப்பட்டது. ப்ரதி தினம் ஸ்ரீ பகவத்பாதாள் உற்சவ மூர்த்திக்கு சிவாஸ்தானம் ப்ரும்ம தீர்த்தக் கரையில் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று கோவில் வளாகத்திற்குள்ளேயே ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த்து. சிறப்பு ஹோமங்களும் நான்கு நாட்களுக்கு நடைபெற்றன. ஏனாத்தூர் சங்கரா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள 100 அடி ஆதிசங்கரர் சிலைக்கும் அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டது. ஸ்ரீமடத்தின் அனைத்து கிளைகளிலும் ஸ்ரீ சங்கர ஜயந்தி நியமத்துடன் கொண்டாடப்பட்டது.*
- *06.05.20 - ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி - ஸ்ரீமடம் முகாமில் நரஸிம்ம ஜயந்தி சிறப்பு பூஜை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் செய்தார்கள்.*
- *10.05.20 - ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பீடாரோகண நாள் ஸ்ரீமடம் முகாமில் ஹோமங்கள், பாராயணங்கள் ஆகியவற்றுடன் கொண்டாடப்பட்டது.*
- *24.05.20 அன்று வாரணாசியில் உள்ள சம்பூர்ணானந்த சமஸ்கிருத விஸ்வ வித்யாலயா சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ராஷ்டிரீய வைதீக சம்மேளனத்திற்கு வீடியோ கான்பரன்ஸிங் மூலமாக ஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.*
- ***05.06.20 - ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜயந்தி***
- *நடமாடு தெய்வமென பக்தர்களால் அன்போடு அழைக்கப்பட்ட ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகளின் 126வது ஜயந்தி மஹோத்ஸவம் காஞ்சீபுரம் ஸ்ரீமடத்தில் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. அன்று காலை ஸ்ரீமடம் முகாம்*

அமைந்துள்ள தேனம்பாக்கத்திலிருந்து ஸ்ரீ பெரியவாள் ஸ்ரீமடத்திற்கு வந்து ப்ருந்தாவன சன்னதியில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்தார்கள். ஏகாதச ருத்ர ஜப ஹோமங்கள் நடைபெற்று ப்ருந்தாவனத்திற்கு கலசாபிஷேகம் செய்யப்பட்டு மலர்களாலான விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. வாக்யார்த்த சதஸும் நடைபெற்றது. மாலையில் ஸ்வர்ண ரதம் ப்ருந்தாவன வளாகத்திற்குள்ளாகவே வலம் வந்தது.

- ஊரடங்கு அமுலில் இருந்ததால் பக்தர்கள் வருகை வரையறுக்கப்பட்டிருந்தது. பக்தர்கள் ஆங்காங்கே தங்கள் இருப்பிடத்திலேயே ஜயந்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். குறிப்பாக அமெரிக்காவில் எல்லா மாகாணங்களிலும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜயந்தி விசேஷமாக கொண்டாடப்பட்டது. தேனம்பாக்கத்திலும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜயந்தியை முன்னிட்டு சிறப்பு ஹோமங்களும் பாராயணங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- ***16.06.20 - பௌமாஸ்வினி -***

- தேவி அதர்வசிர்ஷ உபநிஷத்தில் குறிப்பிட்டுள்ளபடி புனிதமான பௌமாஸ்வினி தினமானது (அஸ்வினி நக்ஷத்ரத்தோடு கூடிய செவ்வாய்கிழமை) ஒரு அதிசய நிகழ்வாகும். இந்த புண்ய தினத்தில் தேவி மந்த்ரங்களை ஜபிப்பது நல்ல பலன்களைத் தரும். ஆகவே ஸ்ரீ பெரியவாள் முகாமிட்டிருக்கும் தேனம்பாக்கத்தில் 16.06.2020 அன்று ஸ்ரீஸூக்தம், பாக்ய ஸூக்தம், ஸ்ரீவித்யா ஹோமங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த ஹோம பூர்ணாஹுதியில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் பங்கேற்று அனுக்ரஹித்தார்கள். மேலும் ஸ்ரீமடத்தின் கிளைகள் சீர்காழி, சேலம், தஞ்சாவூர், கல்லிடைக்குறிச்சி, திருவானைக்காவல், விழுப்புரம், கும்பகோணம், பெங்களூர், காசி, புதுதில்லி, சதாரா மற்றும் பார்லி வைத்யநாத் கோவில் ஆகியவற்றில் தேவி சப்தசதி பாராயணம் மற்றும் சண்டி ஹோமங்கள் நடைபெற்றது. இந்த நிகழ்வு மீண்டும் ஜூலை 14ம் தேதியும் வருகிறது.

- தொடர்ந்து இந்த வருஷத்திய சாதுர்மாஸ்ய வ்ரதத்தையும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தேனம்பாக்கம் சிவாஸ்தானம் வளாகத்திலேயே ஜூலை மாதம் 5ம் தேதி முதல் அனுஷ்டிக்க உள்ளார்கள்.

தொடரும்.....

# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஹோமம்

‘ஒட்யானபீட நிலயா‘ என்று போற்றப்படும் காஞ்சி திவ்யக்ஷேத்ரத்தில் ஸ்ரீ காமாக்ஷி தேவி கொலு வீற்றிருக்கும் ஆலயத்தினுள் லோகக்ஷேமத்திற்காகவும், உலகனைத்துமுள்ள பக்தர்கள் அனைத்து விதமான கஷ்டங்களும் நீங்கப்பெற்று, சமஸ்த மங்களங்களையும் அடையவேண்டியும், உலகில் நிலவி வரும் சஞ்சலங்கள் நீங்கி எல்லோரும் நலம் பெறவும், மஹாயக்ஞம் நடத்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகளின் அருளாசியுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ லலிதாசஹஸ்ரநாமம் நூறு கோடி ஆவர்த்திகள் ஜபமாக செய்து, இப்பொழுது விதிப்படி ஸ்ரீவித்யா மூலமந்த்ரசஹித ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம ஹோமமாக நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மஹாயக்ஞமானது இந்த வருடம் (2020) ஜுலை 2ம் தேதியன்று ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் சந்நிதியில் துவங்கி ஹோமம், தர்ப்பணம், மார்ஜனம், போஜனம் ஆகியவைகளுடன் நடைபெற இருக்கிறது. அனைத்து பக்கதர்களும் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ, பொருளாகவோ அளித்து குருவருளும் திருவருளும் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| காணிக்கை செலுத்துவதற்கான விவரங்கள் | |
|---|---|
| Account Name | Kanchi Kamakoti Peetam Sahasranama Homam |
| Type | Savings |
| Bank Name | Indian Bank |
| Branch | Sankara Mutt, Kanchipuram |
| Account Number | 6884217334 |
| IFS Code | IDIB000S085 |

பக்தர்கள் தங்களால் இயன்ற காணிக்கையை யாகத்திற்கு அளிக்கலாம். தாங்கள் சமர்ப்பிக்கும் காணிக்கை பூஜை சாமான்கள், ஹோம த்ரவ்யங்கள், சுவாசினி பூஜை, கன்யா பூஜை, வடுக பைரவ பூஜை, ரித்விக்குகள் சம்பாவனை, அன்னப்ரசாதம் ஆகியவைகளுக்கு உபயோகபடுத்தப்படும். ஒரு யாக குண்டத்திற்கு ஒரு நாளைக்கு ஆகும் செலவு சுமார் ரூ.81,000 ரூபாய் ஆகும்.

பக்தர்கள் தங்களது காணிக்கைகளை காசோலை, வரைவோலை, வங்கி கணக்கு NEFT/ RTGS மூலமாகவும் சமர்ப்பிக்கலாம்.

*காணிக்கை செலுத்துபவர்கள் தங்களது பெயர், கைப்பேசி எண், விலாசம், செலுத்திய பணத்தின் விவரம், வங்கி பண பரிமாற்ற விவரம், சங்கல்ப விவரங்கள் ஆகியவைகளை* kamakotiseva@gmail.com *என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும் அல்லது தபால் மூலம் ஸ்ரீகார்யம், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், 1, சாலை தெரு, காஞ்சிபுரம் - 631502 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.*

*மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்*
*ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீகோபால் (கைபேசி - வாட்ஸாப்) - 9498812609*
*இணையதள முகவரி* - www.kanchikamakshi.org
*மின்னஞ்சல்* - kamakotiseva@gmail.com

***ஸ்ரீ விஸ்வநாத ஐயர்***
*ஸ்ரீகார்யம் - ஏஜண்ட்*
*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்*
*044-27222115*

***ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரி***
*ஸ்ரீகார்யம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்*
*தேவஸ்தானம்*
*9840720182*

# சாதுர்மாஸ்யமும் வ்யாஸபூஜையும்


மழைக்காலம் வரும்பொழுது ஸன்யாஸிகள் நமது பாரதத்தில் எங்கும் போகாமல் ஓரிடத்திலேயே தங்கியிருந்து வ்ரதம் மேற் கொள்வர். பௌர்ணமி அன்று வ்யாஸ பூஜை செய்வர். வட நாட்டில் இருக்கும் க்ருஹஸ்தர்களும் இதை மேற்கொண்டு சில காய் கிழங்குகளை உணவில் நீக்கி வ்ரதமிருப்பர். சங்கர மடங்களில் பூஜை முறை கீழ்கண்டவாறு அமையும்.

**ஆறு பஞ்சகங்களுக்குப் பூஜை**

1. **க்ருஷ்ண பஞ்சகம் :** இதில் நடுவில் க்ருஷ்ணபகவானும் மற்றும் வாஸுதேவோ், ஸங்கர்ஷணர், ப்ரத்யும்னர், அனிருத்தர் இவர்கள் க்ருஷ்ணருக்கு கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளிலும்.

2. **ஸனகாதி பஞ்சகம் :** மத்தியில் ஸனகர் இவருக்கு நான்கு திக்குகளிலும் ஸனந்தர், ஸனாதனர், ஸனத் ஸுஜாதர், ஸனத்குமாரர் இந்நான்கு பேர்களும்.

ௐ



ஶ்ரீ-ஶங்கரப${}^{4}$க${}^{3}$வத்பாதா${}^{3}$சார்ய-பரம்பராக${}^{3}$தமூலாம்நாய-ஸர்வக்ஞபீட${}^{2}$
ஶ்ரீ காஞ்சீ-காமகோடி-பீட${}^{2}$-ஶ்ரீமட${}^{2}$ஸம்ஸ்தா${}^{2}$நம்

# ।। அம்ரு தஸித்${}^{3}$தி${}^{4}$யோக${}^{3}$-தே${}^{3}$வீ-பாராயணம் ।।

## ஶ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஶ்ரீ ஶங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகளின் உத்தரவின்படி அம்ருதஸித்தி யோக தினங்களன்று செய்ய வேண்டிய பாராயணங்கள் குறித்த அறிக்கை

காலம் என்பது ஸகல செயல்களுக்கும் ஆதாரமாகும். "பருவத்தே பயிர்செய்" என்று ஆன்றோர் வாக்கிற்கிணங்க உரிய நேரத்தில் செய்யப்படும் செயல்களுக்கு அதிக பலன் கிடைக்கிறது.

காலத்தின் தொடர்சுழற்சியில், நமக்கு சிரமங்கள் வரக்கூடியதை அறிவிக்கும் க்ரஹ நக்ஷத்ராதிகளின் தீய யோகங்களுடன், நன்மைகளை பன்மடங்கு அளிக்கவல்ல நல்யோகங்களும் ஏற்படுகின்றன. காலத்தின் இத்தகைய ஸூக்ஷ்மமான தன்மையை அறிந்த ரிஷிகள் ஶாஸ்த்ரத்தின் மூலம் இதை நமக்கு போதித்து அளப்பரிய அனுக்ரஹத்தை செய்திருக்கிறார்கள். வருமுன் காப்போனாக சிரமங்கள் வரும் காலத்திற்கு பாதுகாப்பு செய்து கொள்ளவும் நன்மை பயக்கும் காலத்தில் முயன்று சுபகாரியங்களைச் செய்து மகிழவும் நமக்கு வழிகோலியுள்ளார்கள்.

அத்தகைய நல்யோகங்களில் கிழமைகள் மற்றும் நக்ஷத்திரங்களின் சில சேர்க்கைகள் அம்ருத ஸித்தி யோகங்கள் எனப்படுகின்றன. அவையாவன:-

**ஞாயிறு - ஹஸ்தம், திங்கள் - ம்ருகஸீர்ஷம், செவ்வாய்-அச்வினி, புதன்-அனுஷம், வியாழன்-பூசம், வெள்ளி-ரேவதி, சனி-ரோஹிணி** என்பவை.

ஆதி³த்யஹஸ்தே கு³ருபுஷ்யயோகே³ பு³தா⁴நுராதா⁴ ஶநிரோஹிணீ ச ।
ஸோமே ச ஸௌம்யம் ப்ரு’⁴கு³ரேவதீ ச பௌ⁴மாஶ்விநீ
சாம்ருதஸித்³தி⁴யோகா³:।।

இதே ச்லோகத்தில் ஸோமஶ்வண்யாம் என்ற பாடத்தின்படி **திங்கள்-திருவோணம்** கூட சிறப்பான யோகமாக போற்றப்படுகிறது. இத்தகைய யோகங்களில் செய்யப்படும் நற்காரியங்கள் நம்மைக் காத்து போஷிப்பதில் வலிமை மிக்கவையாகின்றன.

உதாஹரணமாக தேவீ அதர்வஶீர்ஷத்தில் பௌமாஶ்விந்யாம் மஹாதேவீஸந்நிதௌ ஜப்த்வா மஹாம்ருத்யும் தரதி என்று, அதாவது செவ்வாயும், அச்வினியும் கூடும் தினத்தில் பாராயணம் செய்தால் கோரமான மரணத்தையும் வெல்லலாம் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே இத்தகைய வீரியம் மிகுந்த திங்களன்று கீழ்கண்ட தேவீ பரமான பாராயணங்களை ஆசாரத்துடன் ஸம்ப்ரதாய முறைப்படி செய்து லோக க்ஷேமத்தையும் தனது க்ஷேமத்தையும் ஸாதித்துக் கொள்ளும்படி ஸ்ரீ ஆசார்யபாதர்கள் ஆக்ஞாபிக்கிறார்கள்.

இயன்றவரை கீழ்கண்ட அனைத்து நூல்களையும் பாராயணம் செய்யவும்

ஒரே நாளில் செய்ய இயலாவிடில் அம்ருதஸித்தி தினத்தன்று தொடங்கியோ அல்லது முடியும்படியோ இரண்டு அல்லது மூன்று நாட்களாகவும் செய்யலாம்.

தினமும் ஸ்நானம், ஸந்த்யாவந்தனம் முதலிய நித்ய கர்மானுஷ்டானத்தை முடித்த பின் இதனை செய்யவும்.

## பாராயணம் செய்ய வேண்டிய நூல்கள்

1. துர்கா ஸப்தஶதீ
2. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்
3. ஸௌந்தர்யலஹரீ
4. மஹாபாரத விராட பர்வத்தில் உள்ள துர்கா ஸ்துதி (இணைக்கப்பட்டள்ளது)

5. அப்பைய தீக்ஷிதரின் துர்கா சந்த்ரகலா ஸ்துதி (இணைக்கப்பட்டுள்ளது)

6. மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

7. அபிராமி அந்தாதி

**நைவேத்யம் :** தயிர்சாதம்

கீழ்கண்ட சங்கல்பம் சொல்லி பாராயணம் செய்து குருவருளும், திருவருளும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Naivedyam - Dadhi (curd rice)

Please do the parayanam with sankalpam as given below and receive the Grace of Guru and Devi.

॥ ஸங்கல்ப:॥

மமோபாத்த + ப்ரீத்யர்த2ம் ப4க3வத்யா: ஜக3த3ம்பா3யா: ப்ரஸாதே3ந -

- இதா3நீம் லோகே ஸர்வத்ர ப்ரஸ்ருʼதஸ்ய ஸாங்க்ராமிக-ரோக3 விஶேஷஸ்ய நிஶ்ஶேஷம் உந்மூலநார்த2ம்.
- அஸ்மத்3தே3ஶீயாநாம் விதே3ஶீயாநாம் சாபி ஸர்வேஷாம் வ்யாதி4-ப4-ய நிவ்ருʼத்த்யர்த2ம்.
- ஸஞ்சார-ப்ரதிஷேதா4த் ஸஞ்ஜாதஸ்ய ஶுப4கார்ய-ப்ரதிப3ந்த4ஸ்ய உத்3யோகா3தி-ப்ரதிப3ந்த4ஸ்ய தஜ்ஜந்யாயா: ஆர்தி2க-து3:ஸ்தி2தேஶ்ச பரிஹாரார்த2ம்
- ஸர்வேஷாம் தார்4மிக-அநுஷ்டா2நாநாம் மந்தி3ராதி3ஷு ப4க3வத: பூஜா-உத்ஸவாநாம் ச யதா2பூர்வம் ஶீக்4ரமேவ ப்ரவ்ருʼத்த்யர்த2ம்.
- ஜநாநாம் து3ர்விசார-நிவ்ருʼத்தி-பூர்வக-ஸத்3விசார-அபி4வ்ருʼத்3த்4யர்த2ம்
- ஸாதூ4நாம் தார்4மிகாணாம் ச தை4ர்ய-விஶ்வாஸ-புஷ்டி-ஸித்3த்4யர்த்த2ம் ஆத4ர்மிக-ஶக்தீநாம் விநாஶார்த2ம்.
- தத்3த்3வாரா ஸர்வலோக-க்ஷேமார்த2ம்.

து3ர்கா3ஸப்தஶதீ-லலிதாஸஹஸ்ரநாம-ஸௌந்த3ர்யலஹரீ-விராடபர்வது3ர்கா3ஸ்துதி-து3ர்கா3சந்த்3ரகலாஸ்துதி-மஹிஷாஸுரமர்தி3நீஸ்தோத்ர-அபி4ராம்யந்தாதி3ஸ்தோத்ர-பாராயணம் கரிஷ்யே ।

## ।। ஶார்வரி-ஸம்வத்ஸர-அம்ருத-ஸித்தி-யோக-திநாநி ।।

| | | |
|---|---|---|
| 16-Jun-2020 | பௌ4மாஶ்விநீ-புண்யகால: | பூர்ணம் அஹ: |
| 20-Jun-2020 | ஶநிரோஹிணீ-புண்யகால: | ▶ 12:00 |
| 28-Jun-2020 | ஆதி3த்யஹஸ்த-புண்யகால: | 08:45 ▶ |
| 14-Jul-2020 | பௌ4மாஶ்விநீ-புண்யகால: | ▶14:05 |
| 26-Jul-2020 | ஆதி3த்யஹஸ்த-புண்யகால: | ▶12:35 |
| 29-Jul-2020 | பு3தா4நுராதா4-புண்யகால: | 08:31 ▶ |
| 03-Aug-2020 | ஸோமஶ்ராவணீ-புண்யகால: | 07:17 ▶ |
| 26-Aug-2020 | பு3தா4நுராதா4-புண்யகால: | ▶13:02 |
| 31-Aug-2020 | ஸோமஶ்ராவணீ-புண்யகால: | ▶15:02 |
| 02-Oct-2020 | ப்ரு’4கு3ரேவதீ-புண்யகால: | பூர்ணம் அஹ: |
| 30-Oct-2020 | ப்ரு’4கு3ரேவதீ-புண்யகால: | ▶14:55 |
| 25-Jan-2021 | ஸோமம்ரு’க3ஶீர்ஷ-புண்யகால: | பூர்ணம் அஹ: |
| 28-Jan-2021 | கு3ருபுஷ்ய-புண்யகால: | பூர்ணம் அஹ: |
| 20-Feb-2021 | ஶநிரோஹிணீ-புண்யகால: | பூர்ணம் அஹ: |
| 22-Feb-2021 | ஸோமம்ரு’க4ஶீர்ஷ-புண்யகால: | ▶10:56 |
| 25-Feb-2021 | கு3ருபுஷ்ய-புண்யகால: | ▶13:16 |
| 16-Mar-2021 | பௌ4மாஶ்வநீ-புண்யகால: | பூர்ணம் அஹ: |
| 20-Mar-2021 | ஶநிரோஹிணீ-புண்யகால: | ▶16:44 |
| 13-Apr-2021 | பௌ4மாஶ்விநீ-புண்யகால: | ▶14:18 |

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## கம்சனின் பிறப்பு

அதென்ன ? கம்சனின் பிறப்பு எல்லாருக்கும் தெரிந்ததுதானே. பௌராணிகர் கூறினார். இதில் தெரியாத விஷயங்கள் உள்ளன. ஸூக்ஷ்மமாகவும் உள்ளன. வழக்கம்போலவே தானவர்களுக்கும், தேவர்களுக்கும் பகை, யுத்தம். கால் நேமி என்பவன் ஆற்றல் கொண்ட ஒரு தானவன். விஷ்ணுவின் பராக்ரமத்தால் அவன் கொல்லப்பட அசுரகுரு சுக்ராசார்யாரால் சஞ்சீவினி மந்த்ரமகிமையால் உயிர் பிழைத்துவிடுவான். அவன் மட்டுமல்ல மற்ற தானவர்களும் உயிர் பிழைத்துவிடுவர். இப்படி இருக்கையில் அந்த தானவன் கடுமையான தவம் மேற்கொண்டான்.

ப்ரம்மா அவன் முன் எழுந்தருளி தவத்தை மெச்சி வரம் கொடுக்கத் தலைப்பட்டார். கால நேமியும் விஷ்ணுவை வெல்ல எண்ணி எந்த தேவனாலும் என்னைக் கொல்ல முடியாத வரம் கேட்டான். அவரும் இது அடுத்தபிறவியில் தான் நடக்குமென்று கூறினார். த்வாபரயுகத்தின் இறுதியில் இது நடந்தபோது கம்சன் பிறந்தான்.

கம்ஸன் ஒரு கொடூரமான அரசனாயிருந்தான். அவனுடைய அப்பா உக்ரசேனனையே சிறையில் தள்ளினவன். தன் தமக்கை தேவகியைக் கொல்லப்பார்த்தவன். அவளுக்குப் பிறந்த குழந்தைகளை இரக்கமின்றி கொன்றவன். இவ்வளவு க்ரூரமாக யாருமிருந்ததில்லை. அதற்கு ஒரு காரணமுண்டு.

த்ரிலோக சன்சாரியான நாரதமுனிவர் ஒருசமயம் கம்சனைப் பார்க்க வந்தார். அவனிடம் அவனுடைய தங்கை தேவகியின் எட்டாவது குழந்தை அவனைக் கொல்லும் என்று கூறி அவளை மாய்த்துவிடு ஏனென்றால் அவள் உன்னுடைய உண்மையான தங்கை இல்லை, அவனும் உக்ரசேனனின் பிள்ளை இல்லை என்று கூறினார்.

திடுக்கிட்ட கம்சன் விவரம் கேட்டான். நாரதர் கூறினார். விதர்ப நகரத்தின் அரசன் ஸுகேதுவின் பெண் பத்மாவதி. அவள் மதுரையின் அதிபதியாகிய உக்ரஸேனனுக்கு மணம் முடித்து வைக்கப்பட்டாள். ஒரு ஸமயம் அவர்கள் இருவரும் ஏகாந்தமாக சுயமுனம் என்னும் மலைப் ப்ரதேசத்தில் இயற்கையை ரசித்து வந்தனர். அப்போது துர்மிலன் என்னும் தானவன் அங்கு வர அவளைக் கண்டு மோகித்தான். அவளை

அடைவது சுலபம் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டபின் அவளை அடைய ஒரு சூழ்ச்சி செய்தான். உக்ரசேனன் போல் தன் உருவை மாற்றிக்கொண்டு அவளிடம் சென்றான். அந்த இரவை அவளுடன் சுகித்தான். அவனுடைய சூழ்ச்சியை அறிந்த பத்மாவதி கலங்கி கோபம் கொண்டாள். அவன் அதற்கெல்லாம் கலங்கவில்லை.

தான் மானபங்கப்படுத்தப்பட்டதை தெரிந்த அவள் தன் வயிற்றில் உருவான கருவை கலைக்க முற்பட்டாள். அப்போது அந்த கரு பேசியது. ''அம்மா என்னைக் கொல்ல வேண்டாம். கால நேமியைக் கொன்ற விஷ்ணுவைப் பழிவாங்கக் காத்திருக்கிறேன். '' பத்மாவதியும் சம்மதிக்க நீ பிறந்தாய். இதுவே உன் பிறப்பின் ரகசியம் என்று நாரதர் கூறினார்.

வருடங்கள் சென்றன. கம்சனும் தேவகியின் எட்டாவது குழந்தையாகப் பிறந்த க்ருஷ்ணரால் கொல்லப்பட்டான். க்ருஷ்ணரை அழிக்க எவ்வளவோ அவன் முயன்றாலும் அவைகளில் அவன் வெற்றி பெறவில்லை. கால நேமி தேவர்களால் மரணம் அடையக்கூடாது என்று வரம் வேண்டினான். ஆனால் மனிதர்களிடமிருந்து என்று கேட்கவில்லை.

(புராணாந்தரம்)

3. **வ்யாஸ பஞ்சகம் :** நடுவில் வ்யாஸரும் இவருக்கு நான்கு திக்குகளில் ஸுமந்து, ஜைமினி, வைசம்பாயனர், பைலர் இவர்களும்.

**4. சங்கராசார்ய பஞ்சகம் :** மத்தியில் ஆதி ஆசார்யாளுமவருடைய நாலு திக்குகளிலும் பத்மபாதாசார்யர், ஹஸ்தாமலக் ஆச்சார்யர், தோடகாஸார்யார், ஸுரேஸ்வராஸார்யார் இவர்களும்

5. **த்ரவிட பஞ்சகம் :** மத்தியில் த்ரவிடாசார்யார் இவருக்கு நாலு திக்குகளில் கௌட பாதாசார்யார், கோவிந்த பாதாசார்யார்,ஸான்க்ஷே பாசாரீரக ஆசார்யார், விவரணாசார்யார் இவர்களும்.

6. **குரு பஞ்சகம் :** மத்தியில் குருவும் அவருக்கு நாலு திக்குகளில் பரம குரு, பரமேஷ்டி குரு, பராபர குரு இதர ப்ரம்ம வித்யாசார்யர்கள் இவர்களும் நாரதர், திக்பாலகர்கள் ப்ரம்மா, ஆதிசேஷன் முதலியவர்களுக்கும் பூஜை உண்டு.

மேற்சொன்ன க்ரமப்படி பூஜை முடித்து ஆசார்யரின் பாஷ்யங்களைப் படிப்பர். பின்பு சாந்தி மந்த்ரங்கள் கூறி ஆச்சார்யரின் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் கூற பூஜை

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

कमलदलामल कोमलकान्ति कलाकलितामल बाललते
सकलविलास कलानिलयक्रम केलिचलत्कल् हम्सकुले ।
अलिकिलसन्कुल कुवलयमण्डल मौलिमिलत्बकुलालिकुले
जय जय हे महिषाशुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १३ ।।

**கமலதலாமல கோமலகாந்தி கலகலிதாமல பாலலதே**
**ஸகலவிலாஸ கலானிலயக்ரம கேலிசலத்கல ஹம்ஸகுலே ।**
**அலிகுலஸங்குல குவலயமண்டல மௌலிமிலத்பகுலாலிகுலே**
**ஜயஜய ஹே மஹிஷாஸுரமர்டினி ரம்யக பர்தினி சைலஸுதே ॥ 13 ॥**

*தாமரையிதழ் போன்ற மென்மையும் அழகும் வாய்ந்த பரந்த நெற்றியை உடையவளே எல்லா கலைகளின் இருப்பிடமும் நீயே என்பதை உணர்த்துகின்ற அன்ன நடை உடையவளே தாமரை மலர்களை வண்டுகள் சூழ்வதுபோல் வண்டுகள் மொய்த்திடும் வகுள மலர்களைத் தலையில் சூடியவளே மஹிஷாசுரனை அழித்தவளே மலைமகளே பின்னிய கூந்தலை உடையவளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

करमुरलीरव वीजितकूजित लज्जितकोकिल मन्जुमतेय
मिलितपुलिन्द मनोहरगुन्जित रन्जितशैल निकुन्जगते ।
निजगणभूत महाशबरीगण सत्गुणसभ्रुत केलितले
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १४ ।।

**கரமுரலீரவ வீஜிதகூஜித லஜ்ஜிதகோகில மஞ்சுமதே**
**மிலிதபுலிந்த மனோஹரகுஞ்சித ரஞ்சிதசைல நிகுஞ்சகதே ।**
**நிஜகுணபூத மஹாசபரீகன ஸத்குண ஸம்ப்ருத கேலிதலே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்டினி ரம்யகபர்தினி சைலஸுதே ॥ 14 ॥**

*உன்கை புல்லாங்குழல் வெட்கப்படும் அளவுக்கு குயில்போல் இனிய குரல் படைத்தவளே மலைவாசிகள் பாடி மகிழ்ந்து திரிகின்ற மலைகளில் மகிழ்ச்சியுடன் உறைபவளே நற்குணங்கள் அனைத்தும் சேர்த்து ஓர் உருவம் பெற்றதுபோல் வேட்டுவ பெண்களின் கூட்டத்தில் சிறந்து விளங்குபவளே மஹிஷாசுரனை அழித்தவளே பின்னிய கூந்தலை உடையவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

(தொடரும்)

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

अविध्याक्रुते भेदभावे प्रविनाशिते इदमेकम् अद्वैतम् । 68

**அவித்யாக்ருதே பேதாபாவே ப்ரவினாஸிதே இதமேகம் அத்வைதம்**

**ப்ரம்ம ஸூத்ர பாஷ்யம்**

*அவித்யையால் பேதபாவம் நசிக்க உதிக்கும் அத்வைதம்.*

रज्जुरद्वाया सत्या चैवम् तुरीय: । 69

**ரஜ்ஜுரத்வயா ஸத்யா சைவம் துரீய: (மாண்டூக்ய பாஷ்யம்)**

*ரஜ்ஜு சர்பத்தில் துரீயமான ஸத்யம் ரஜ்ஜு போன்றதே.*

सर्व द्वैत उपशमत्वादेव शिव: । 70

**ஸர்வ த்வைத உபஸமத்வாதேவ ஸிவ: (அண்டுக்ய பாஷ்யம்)**

*இரண்டு எனும் பேத அறிவு போக இருப்பது சிவமே.*

अद्वैतमेव सत्यम् त्वम् विद्‌दि । 71

**அத்வைதமேவ ஸத்யம் த்வம் வித்தி (தத்வோபதேஸ: )**

*அத்வைதம் ஒன்றுதான் சத்யம் இதை அறி.*

सदिदम् परमाद्वैतम् । 72

**ஸதிதம் பரமாத்வைதம் (விவேக சூடாமணி)**

*ஸத்தாய் இருப்பதே அத்வைதமாயுள்ளது.*

अद्वितीये परे तत्वे निर्विशेषे भिदा कुत: । 73

**அத்விதீயே பரே தத்வே நிர்விஸேஷே பிதா குத: (விவேக சூடாமணி)**

*நிர்விஸேஷமான அத்விதீயமான பர தத்வத்தில் பேதம் எப்படி வரும்?*

द्वैतम् नो सहते श्रुति: । 74

**த்வைதம் ந ஸஹதே ஸ்ருதி: (விவேக சூடாமணி)**

*த்வைதத்தை ஸ்ருதி ஒத்துக்கொள்ளாது.*

ब्रह्मानन्दम् परमाद्वैतम् शुद्दम् बुद्दम् तत्वमसि त्वम् । 75

**ப்ரம்மானந்தம் பரமாத்வைதம் சுத்தம் புத்தம் தத்வமஸி**

**(ஸர்வ வேதாந்த ஸார ஸங்க்ரஹ: )**

*சுத்தனாயும் புத்தனாயும் பரமாத்வைதனாயும் ப்ரம்மானந்தமாயும் நீ இருக்கிறாய்.*

अद्वैतमेव सत्यम् तस्मिन् न सत्यमह्दस्तम् । 76

**அத்வைதமேவ ஸத்யம் தஸ்மின் த்வைதம் ந ஸத்யமத்யஸ்தம்**

*அத்வைதமே ஸத்யம். அதன் மேல் த்வைதம் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.*

आरोपणम् न शून्ये तस्माददद्वैतसत्यता ग्राह्या । 77

**ஆரோபணம் ந சூன்யே தஸ்மாத் அத்வைத ஸத்யதா க்ராஹ்யா.**
**(ஸ்வாத்ம நிரூபணம்)**

*ஸூன்யத்தில் ஆரோபணம் செய்யமுடியாது. அதனால் அத்வைத உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

श्रुत्या प्रतिपादनीयम् अद्वैतम् । 78

**ஸ்ருத்யா ப்ரதிபாதனீயம் அத்வைதம் (ஸ்வாத்ம நிரூபணம்)**

*அத்வைதம் ஸ்ருதியினால் உறுதிப்படுத்தப்படும்.*

*(தொடரும்)*

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

*ஆத்மாவின் உண்மை ஸ்வரூபத்தைச் சொல்லுதல்*

**ஏதேஷாம் புத்ராதீனாமனாத்மத்வம் உச்யதே 132**

*மேலே சொல்லப்பட்ட புத்ரன் முதலிய அனாத்ம தத்வம் சொல்லப்படுகிறது.*

**ஏதைரதிப்ராக்ருதாதி வாதிபிருக்தேஷு ஸ்ருத்யுக்த அனுபவ பாஸெஷு பூர்வ பூர்வோக்த ஸ்ருத்யுக்த அனுபவ ஆபாஸானாம் உத்தர உத்தர ஸ்ருத்யுக்தானுபவ அவபாஸைராத்மத்வ பாததர்சனாத் புத்ராதீனாம் அனாத்மத்வம் ஸ்பஷ்டமேவ । 133**

*வெவ்வேறு வாதிகளால் மேலே சொல்லப்பட்ட வாதங்கள் குழப்பத்தில் உள்ளவை. ஒவ்வொரு வாதமும் பின்சொல்லப்பட்ட வாதத்தால் நிராகரிக்கப்படும். எனவே புத்ரன் முதல் சூன்யம் வரை அனாத்மாவே.*

**கின்ச ப்ரத்யக் ஸ்தூல அசக்ஷுரப்ராணோ அமனா அகர்தா சைதன்யம் சின்மாத்ரம் ஸத் இத்யாதி ப்ரபல ஸ்ருதி விரோதாத் அஸ்ய புத்ராதி ஸூன்ய பர்யந்தஸ்ய ஜடஸ்ய சைதன்ய பாஸ்யத்வேன கடாதிவத் அனித்யத்வாதஹம் ப்ரம்மேதி வித்வத் அனுபவ ப்ராபால்யாச்ச தத் ஸ்ருதியுக்தி அனுபவ ஆபாஸானாம் பாதித்வாதபி புத்ராதி சூன்யபர்யந்தம் அகிலம் அனாத்மைவ । 134**

*புத்ரன் முதல் சூன்யம் பர்யந்தம் கூறப்பட்ட விவாதங்கள் அனைத்தும் தவறானவை. பரம்பொருள் அல்ல கண் கிடையாது. ப்ராணன் அல்ல. மனம் அல்ல, கர்தா அல்ல ஸத்தாகவும் சைதன்யமாகவும் இருந்து எல்லாபொருள்களையும் ப்ரகாசிக்க செய்து கொண்டும் அனுபவத்தால் வித்வான்களுக்கு விளங்குவதுமான இந்த ஆத்மாவிற்கு புத்ரன் முதல் சூன்யம் வரை அனாத்மாவே.*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

## தர்மர் த்ரௌபதியை இழத்தல்

*சகுனி அரசனே மாபெரும் செல்வங்களை இழந்து விட்டதால் வாட்டமடையாதே. உன்னுடைய மனைவி இருக்கிறாள். அவலை பணயம் வை.*

*தர்மர் என் தர்ம அர்த காமத்திற்குத் துனையானவளும், ஸர்வாங்க ஸுந்தரியான பாஞ்ஜாலியை பணயம் வைக்கிறேன்.*

*ஐயகோ என் கஷ்டமே.*

*இப்படி தர்மர் கூறியவுடன் சபையில் இருந்தோர் அனைவரும் சீ சீ.. என்று கூறி தர்மரை இகழ்ந்தனர்.*

*அப்போது அவை நடுங்கியது அரசர்கள் திகைப்படைந்தனர், பீஷ்மரும், க்ருபரும் த்ரோணரும் வியர்த்தனர்.*

*தன் ப்ராணன் போய்விட்டது போல் தலையைத் தொங்கப்போட்டு ஸர்ப்பம் போல் மூச்சு விட்டுக்கொண்டு விதுரன் அவையில் துயரத்தில் ஆழ்ந்தான்.*

*த்ருத்ராஷ்ட்ரன் மகிழ்ச்சியுடன் ஜயம்கிடைத்ததா? ஜயம் கிடைத்ததா ? என்று கேட்டான்.*

*மற்றவர்கள் அனைவரும் கண்ணீர் உகுக்க துச்சாசனனும், கர்ணனும் மிக்க உவகை கொண்டனர்.*

*துர்யோதனன் விதுரனே த்ரௌபதியை அழைத்து வா. எங்கள் பணிப்பெண்களுடன் இருக்கட்டும் எங்கள் வீடுகளை பெருக்கட்டும்.*

***விதுரர்*** : *அட மூடனே துர்பாஷையைப் பேசுகிறாய் பிதற்றுகிறாய். பாசத்தால் உன் கழ்த்துக் கட்டப்பட்டுள்ளதை உணரவில்லை. தூங்கிக் கொண்டிருக்கும் புலியை உசுப்பி விட்டாய். அவள் உனக்கு அடிமையாகமாட்டாள். தன்னை இழந்தபின் அவள் பணயம் வைக்கப்பட்டதால் அவள் அடிமை இல்லை. நன்றி கெட்ட விதுரா நாணமில்லா விதுரா என்று கூறி துர்யோதனன் கர்வத்தால் செருக்குண்டு ப்ரதீகாமி ( தூதுவன்) யை ப்பார்த்துக் கூறினான்.*

**துர்யோதனன்** : *ப்ரதீகாமீ பாண்டவர்களைப்பற்றி அச்சம் கொள்ளாதே*

**விதுரர்** : *நம் நலம் விரும்பி அல்லர். நீ போய் பாஞ்சாலியை அழைத்து வா .*

*இப்படி சொல்லப்பட்ட ப்ரதீகாமீ த்ரௌபதியிருக்குமிடம் சென்று முறையிட்டான்.*

**ப்ரதீகாமீ** : *சூதாட்டத்தில் மதம் கொண்ட உன் கணவரை துர்யோதனன் வென்றான். அவனுக்குப் பணிவைடை செய்ய வா. உன்னை அழைத்துப் போகிறேன்.*

**த்ரௌபதி** : *ப்ரதீகாமி என்ன சொல்கிறாய்?யாரேனும் தன் மனைவியயை பணயம் வைப்பாரா? பணயம் வைப்பதற்கு வேறு எதுவும் இல்லையா?*

**ப்ரதீகாமீ** : *பாமினி எல்லா செல்வங்களையும் அவர் இழந்தபின் தன் தம்பிகளையும், தன்னையும் இழந்தபின் உங்களையும் பணயம் வைத்து இழந்தார்.*

**த்ரௌபதீ** : *ப்ரதீகாமி முதலில் என்னை பணயம் வைத்தாரா ? அல்லது தன்னை இழந்தபின் என்னை பணயம் வைத்தாரா? என்று கேள். சபைக்குச் சென்ற ப்ரதீகாமி யுதிஷ்டிரிடம் கூறினவுடன் தர்மர் திகைப்பூண்டு ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தார்.*

**துர்யோதனன் :** *அவள் இங்கு வந்து தர்மரைக்கேட்கட்டும். அதற்கு அவர் என்ன பதில் கூறப்போகிறார் என்றும் பாக்கட்டும். துச்சாசனனே இந்த என் தேரோட்டி ஒரு கோழை. பீமனுக்குப் பயந்தவன். நீயே போய் அவளை இழுத்து வா. தோற்றுப் போனவர்கள் என்ன செய்வார்கள் ?*

*தன் தமையன் கூறியதைக்கேட்ட துச்சாசனன் கோபக் கண்களுடன் பாண்டவர்கள் மாளிகையை அடைந்து த்ரௌபதியிடம் கூறினான்.*

**துச்சாசனன் :** *ஏ பாஞ்சாலி வா வா நீ ஜயிக்கப்பட்டாய். வெட்கத்தை விட்டு துர்யோதனைப் பார். எங்களிடம் வந்துவிடு. அறத்தினால் உன்னை அடைந்துள்ளோம்.*

*மிகக் கலவரம் கொண்ட த்ரௌபதி அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடத்திற்கு ஓடினாள். இடிமுழக்கம் செய்து கொண்டு துச்சாஸனன் அவள் மைக்குழலைப் பற்றி இழுத்தான். அவனால் இழுக்கப்பட்ட அவள் நான் மாதவிடாயில் இருக்கிறேன். மூடனே ஒற்றை வஸ்த்ரத்தில் இருக்கிறேன். சபைக்கு வருவதற்கு எனக்கு அருகதையில்லை.*

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

**வினா : - த்வைத அறிவு, அத்வைத அறிவிற்கு வேண்டுதல் போல, அத்வைத அறிவு த்வைத அறிவிற்கு வேண்டுமா?**

***விடை :*** *- த்வைத உபாஸனத்திற்கு அத்வைத ஞானம் வேண்டுமென்பதில்லை. அவசியமில்லையென்பது மாத்திரமேயன்று; அத்வைதஞானம் உதயமானால், த்வைத நிலையும் அதன் காரியங்களுமே அடியோடு குலைந்து விடும். ஆதலால் த்வைதத்திற்கு அத்வைத வாக்கியங்கள் அங்கமாகமாட்டா.*

**வினா : - இதனால் ஏற்பட்ட முடிவு என்ன ?**

***விடை :*** *- கீழ்க்கூறியவாறு, எந்த நூலிலேனும், ஓர் அத்வைத வாக்கியம் இருப்பினும், அந்நூலிலுள்ள த்வைத வாக்கியங்களெல்லாம் அவ்வத்வைத ஞானத்திற்கு அங்கமாகி, அவ்வத்வைத ஞானத்திலே உட்கருத்து கொண்டவையாகின்றன.*

**வினா : - வேதத்திலுள்ள அநுவாத அர்த்தவாத வாக்கியங்கள் எல்லாம் பலனற்றவைகளா?**

***விடை :*** *- இல்லை. அத்வைத ஞானமாகிய பூர்ணப்ரம்ஹ ஸாக்ஷாத்காரத்தை அடைவதற்குச் சித்த சுத்தியும், சித்த ஒருமைப்பாடும் அவசியம் வேண்டும். அவற்றையடைய அக்னிஹோத்ரம் செய்தலும் தெய்வ வழிபாடு முதலியபற்றைச் செய்தலும் வேண்டும். இதனால் அத்வைதப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்திற்கும் கருமோபாஸனங்களே முதற்படிகள் என்பது விளங்கும். அந்தக் கருமோ பாஸனங்களைப் புகழ்வதால், இந்த அர்த்தவாதங்கள் பூர்ணப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் படிப்படியாக அடைவிக்கின்றனவாய் இருக்கின்றன.*

**வினா : - ஒரு மனிதனுக்கு அத்வைதத்தில் நாட்டமுண்டாவதெப்படி?**

***விடை :*** *-*
*'இளமதி புனைந்த ஈசனதருளால்*
*அத்வைத வாசனை ஆடவர்க்குண்டாம்*
*மற்றெவ் வகையிலும் இல்லவே இல்லை'*

*என்று ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷித ஸ்வாமிகள் காப்புக் கவிகளில் கூறியிருப்பது முன்பே எடுத்துக்காட்டாகப் பெற்றது.*

**வினா : - இவ்வத்வைத தத்துவத்தைப் பரகதியாகக் கொண்ட பண்டித மணிகள் செய்ய வேண்டியதென்ன?**

***விடை : -*** *எந்த எந்த நூல்கள், எந்த எந்த முறையில் இரண்டற்ற அத்வைத உண்மையை, அறிவுறுத்துகின்றன என்பதைத் தங்களுடைய நுண்ணிய அறிவால் ஆராய்ந்து அமைந்த கருத்துக்களையும், அத்வைதசித்தாந்தத்தின் சொரூபத்தையும், உண்மையை ஆராய விரும்பும் மக்களுடைய முன்னிலையில் சமர்ப்பித்து, அவ்வித பக்குவிகளுக்குச் தொண்டாற்றுவதே அத்வைத தத்துவத்தைப் ப்ரகதியாகக் கொண்டுள்ள பண்டிதமணிகள் ஆற்றவேண்டிய அவசியமான கடமைகளில் ஒன்றாகும்.*

**வினா : - அத்வைத சித்தாந்தத்தில் முக்கியமான கொள்கைகள் யாவை?**

***விடை : -*** *1. ஒன்றான பரம்பொருளே எல்லாமாய்த் தோன்றுகிறது.*

*2. உலகத்தோற்றதம் உண்மையன்று, பரம்பொருளே உண்மை.*

*3. ஞானத்தால் மட்டுமே முக்தி பெற முடியும்.*

*4. சிவனும், பரம்பொருளும் வேறல்ல.*

*5. பரம்பொருள் நிர்குணமான வஸ்து.*

*6. ஜீவன்முக்தி*

*7. ஸத்தியத்தின் மூவகை நிலை.*

*8. அரிக்கும், அரசனுக்கும் (தக்ஷிணாமூர்த்திக்கும், நடராஜ மூர்த்திக்கும் போலவும், இராமானுக்கும், கிருஷ்ணனுக்கும் போலவும்) வேறுபாடில்லை.*

***1. ஒன்றான பரம்பொருளே எல்லாமாய்த் தோன்றுகிறது.***

**வினா : - "ஒன்றான பரம்பொருளே எல்லாமாய்த் தோன்றுகிறது" என்பது எவ்வாறு தெரிகிறது.**

***விடை : -*** *நான்கு வேதங்களும் "இவ்வுலகம் முழுவதும் புருஷனே" என்று முழங்குகின்றன. ஆதலால் "புருஷன் என்பவன் பூரணப் பொருள். பூரணப் பொருள் உண்மைப்பொருள். எனவே, ஒன்றான பரம்பொருளே எல்லாம். பரம்பொருளே உண்மைப் பொருள். வேறொன்று உண்மையில்லை" என்பது இரண்டற்ற அத்வைதத்தில் தனிச்சிறப்பமைந்ததொரு முடிவாகும்.*

*(தொடரும்)*

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

பாகம்-2

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*38. 'நிரங்குச திருப்தித' என்ற சொல்லால் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும், நானும் ஒன்றே, வேறில்லை அதாவது பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒன்றே. வேறில்லை என்ற ஆத்ம ஞானத்தில் ஏற்படும் பேரானந்தம் நிகரற்றது என்ற மஹாவாக்கியங்களின் அர்த்தத்தைத்தான் உணர்த்துகிறார் என்று சொல்லவும் வேண்டுமோ? (தரங்கம் 7 ஸ்லோகம் 12)*

*39. கோபிகைகள் யமுனாநதியில் நீராடும் போது தங்களுக்கு கிருஷ்ணனைப் போல அழகுள்ள கணவனை அருள வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்தனர். கல்யாண சந்தர்பத்தில் ஓதும் வேத மந்திரங்கள் கூறுகின்றன. ஸோமா கந்தர்வர்களே அக்னியே மற்ற தேவர்களே இந்த மங்கையை விட்டு விலகிச் செல்லுங்கள். அவன் பூலோக சம்பிரதாயப்படி தன் கணவனின் மூலம் தாய்மை அடைய வேண்டியுள்ளது. இந்த மந்திரங்கள் அவளுக்கு அனுகூலமாக, சாதாரண உணர்ச்சி பூர்வமான அனுபவங்களிலிருந்து விடுவித்து, அவளைத் தாய்மை எனும் உன்னதமான உயர்ந்த நிலையை அடையச் செய்ய ஹேதுவாக இருக்கிறது.*

*40. இந்த வேத சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை ஸ்ரீமத் பாகவதத்தில் கோபியர்கள் நீராடப் போகும் முன் அவர்கள் மரத்தில் வைத்திருந்த வஸ்திரங்களை அபகரித்த ஸ்ரீ கிருஷ்ணனிடம் அவைகளைத் திருப்பி கொடுக்குமாறு வேண்டிய அவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் செய்த உபதேஸமும் ஆகியவை அழகுற சித்தரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ராஸலீலை கோபிகாதீபம், யுகளகீதம் ஆகியவைகள் தொடர்ச்சியாக விவரிக்கப்பட்டு அவை மூலம் கோபியர்கள் கண்ணன் பால் கொண்டிருந்த பரம ப்ரேமையையும், அவர்களின் எண்ண ஓட்டங்களையும், அவர்கள் எது பொய், எது உண்மை என்று அறிந்து மனப்பக்குவம் அடைந்து, பரமாத்மாவுடன் ஐக்யமடைந்து ஆனந்தத்தை அடைந்து, சிறந்த பேற்றை அடைவது ஆகியவை அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீநாரத பக்தி, ஸூத்திரத்தில் (19, 55, 57, 88) பரமப் ப்ரேமையின் லக்ஷணங்களும், வெளிப்பாடுகளும் எத்தகையது விளக்கப்பட்டு இருப்பதையே மேற்கண்ட ஸர்க்கங்கள் ஸ்ரீ கிருஷ்ணர்) கோபிகைகளுடன் நடத்திய லீலைகளின் வாயிலாக சித்தரிக்கின்றன.*

*41. சாதாரணமான மனித அனுபவங்களில், விழிப்பு நிலையில், மனதில் தோன்றும் பூரண நிறைவு பெறாத எண்ணங்கள் நினைவுகள் உருவெடுத்து, நம் உறக்க நிலையில் கனவுகளாக மாறுகிறது. இதையே கவிதை நயத்துடன் பார்க்கும் போது நம் கனவுகளே விழிப்பு நிலையில் நிறைவு பெற்ற நிகழ்வுகளாக மாறுகிறது. இதைத்தான் ஸ்ரீலீலாசுகர்*

*தான் எழுதிய கிருஷ்ணகர்ணாமிருதத்தில் (அங்கநாம் அங்கநாம் என ஆரம்பிக்கும் 2-வது ஆஸ்வாசம் ஸ்லோகம் 35) ராஸலீலையை விவரிக்கும்போது எப்படி ஒரு கனவு, விழிப்பு, நிலையில் உண்மை நிகழ்வாக மாறுவதை கவி நயத்துடன் வர்ணிக்கிறார். இந்த நிலையில் நமது வலுப்பெற்ற ஏகாக்ர சிந்தனைகள் பகவான்பால் இருந்தால் அவனருளால் அவை நிறைவாகும் தன்மையை ராஸக்ரீடா நிகழ்ச்சி மூலம் விவரிக்கிறார். இதில் கிருஷ்ணன் எப்படி தன்னை பல கிருஷ்ணன்களாக ஆக்கிக் கொண்டு கோபியர்களின் இடையே நடனம் புரிந்த நிகழ்ச்சியை அழகாக வர்ணித்துள்ளார். மேலும் கோபியர்கள் அமைத்த வட்டத்தின் நடுவிலும் நின்று புல்லாங்குழல் வாசித்துக் கொண்டு இருக்கிறான். அவர்களுக்கு மற்ற கோபியர்கள் மறைந்து ஒவ்வொரு கோபியும், தான் ஒருவளே கண்ணனுடன் தனியாக ஆடிக் கொண்டிருப்பதாகவே எண்ணி ஆனந்திக்கிறாள். அப்போது கனவும், நினைவும் ஒன்று இணைந்து அவர்களுக்கு தான் கனவுலகத்தில் தான் அனுபவித்த தனிப்பட்ட ஆனந்தம். நினைவு நிலையில் ஒரு உண்மை நிகழ்வாகவே தோன்றுகிறது. இந்த தன் உணர்வு இல்லாது தான், தனது என்ற தளைகளையும் உதறித்தள்ளிவிட்டு அப்பரமாத்மாவிடம் அனன்ய பக்தியுடன் சரணாகதி அடைவதையே ஒவ்வொரு பக்தனும் (ஜீவாத்மாவும்) விரும்புகிறான்.*

*இதை விவரிக்க இயலாத உன்னத ப்ரேமபக்தி பெருக்கு, நினைவுலகத்தையும், கனவாக மாற்றவல்லது என்பது கிரஷ்ணகர்ணாம்ருதத்தில் (விக்ரேது காமா எனத் தொடங்கும் ஸ்லோகம் 55-2வது ஆஸ்வாஸம்) லீலாசுகர் மற்றொரு நிகழ்ச்சியால் வர்ணிக்கிறார். தயிர் விற்கும் ஒரு கோபிகை ப்ருந்தாவனத்தில் 'தயிர், தயிர்' என்று கூறிக் கொண்டு செல்லும் போது கிருஷ்ணனின் பாதகமலங்களில் மனத்தைச் செலுத்தி, அவனுடைய பால லீலைகளில் மனம் லயித்து, தன்னை மறந்த நிலையில் 'தயிர், தயிர்' என்று கூவுவதை மறந்து 'கோவிந்தா, மாதவா, தாமோதரா' என்று தன் இனிய குரலில் கூவ ஆரம்பித்தாள். கனவு, நினைவுகளைத் தாண்டி, பக்திப்ரவசம் ஒருவரை எப்படி மதிமயங்கச் செய்கிறது என்பதை நன்கு உணர முடிகிறது. தன் ஸ்வானுபவங்களை கவிகளாலேயே இப்படி நயம்பட வர்ணிக்க முடியும்.*

*42. மேலும் பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கோபியர்களுடன் ராஸக்ரீடையில் ஈடுபட்ட போது, இவ்விதம் கோபியர்களை கட்டிக் கொள்வது கைகளால், தொடுவது அன்பு ததும்பப் பார்ப்பது, அழகிய கம்பீரமான சிரிப்பு வைகளினால் தன் நிழலைப் பார்த்து விளையாடும் குழந்தைபோல் விளையாடினர் என்று விவரிக்கப்பட்டுள்ளது. 'ரேமே ரமேசோ வ்ரஜஸுந்தரீபி: யதார்பக ஸ்வப்ரதிபிம்ப விப்ரம:' (பாகவதம் ஸ்க.10 அத்யா.33 ஸ்லோக 17)*

*(தொடரும்)*

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

41. **கேள்வி :** தர்மசாஸ்தரத்தை உண்டாக்கியவர் யார் ?

**பதில் :** தங்களின் தவ வலிமையினால் வேத தத்வங்களை உணர்ந்து அவைகளை வெளியிட்ட ரிஷிகள் தர்மசாஸ்த்ரங்களை உண்டாக்கியவர்கள். மனு, அத்ரி, விஷ்ணு, ஹரீதர், யாக்யவல்கியர், யமர், உசனர், ஆபஸ்தம்பர், பராசரர், கௌதமர், போதாயனர், தக்ஷர் முதலானோர்.

42. **கேள்வி :** தர்மம் என்று எதைச் சொல்லுவது ?

**பதில் :** வைதிக விதிகளின்படி எதனுடைய செயல்பாட்டு அறிவு ஏற்படுகிறதோ அதனை தர்மம் என்று கூறுவர். எதனால் நிரந்தர புகழும், மேன்மையும் கிட்டுமோ அதுவே தர்மம் எனப்படும்.

43. **கேள்வி :** ஸனாதன தர்மத்தின் லக்ஷணம் என்ன?

**பதில் :** எல்லா மனிதர்களுக்கும் தர்மத்தின் ஆதாரமாக வாழும் வழிமுறைகளை நிரந்தர மேன்மைக்கு எது கூறுகிறதோ அதுவே ஸனாதன தர்மம்.

44. **கேள்வி :** புராணம் என்பது என்ன?

**பதில் :** கீழ்கண்ட லக்ஷணங்களை உடையது புராணம் எனப்படும்.

அ. ஸர்கம், ஆ. ப்ரதிஸர்கம், இ. வம்சாவளி, ஈ. மன்வந்தரம் எ. வரலாறு.

45. **கேள்வி :** புராணங்கள் எத்தனை?

**பதில் :** 18 புராணங்கள், 18 உபபுராணங்கள்

45. **கேள்வி :** அவைகளின் பெயர் என்ன

**பதில் :** 1. ப்ரம்ம புராணம், 2. பத்ம புராணம், 3. விஷ்ணு புராணம், 4. சிவ புராணம், 5. ஸ்ரீமத் பாகவத புராணம், 6. வாயு புராணம் 7. நாரதீய புராணம், 8. அக்னி புராணம், 9. ப்ரம்ம வைவர்தம், 10. வரஹம், 11.ஸ்காந்தம், 12. மார்கண்டேயம், 13. வாமனம், 14. கூர்மம், 15.மத்ஸ்யம், 16. ப்ரம்மாண்டம், 17. காருடம், 18. பவிஷ்யம்.

**47. கேள்வி :** உபபுராணங்களின் பெயர் என்ன?

**பதில் :** 1. ஸனத் குமாரம், 2. னாரஸிம்மம், 3. ப்ருஹத் நாரதீயம், 4. சிவதர்மம், 5. தூர்வாஸம், 6. காபிலம், 7. மானவம், 8. வாருணம், 10. காலிகா, 11. ஸாம்பம், 12. நந்திகேஸ்வரம், 13. ஸௌரம், 14. பராசரம், 15. ஆதித்யம், 16. ப்ரம்மண்டம், 17. மாஹேஸ்வரம், 18. பாகவதம், 19. வாஸிஷ்டம், 20. கௌர்மம், 21.பார்கவம், 22. ஆதி, 23. முத்கலம், 24. கல்கி, 25. தேவி, 26. மஹாபகவதம், 27. ப்ருஹத்தர்ம, 28. ப்ரானந்தம், 29. பசுபதி.

**48. கேள்வி :** சிவ புராணங்கள் எத்தனை?

**பதில் :** 10 பவிஷ்ய, மார்கண்டேய, லிங்க, வராஹ, ஸ்கந்த, மத்ஸ்ய, கூர்ம, வாமன, ப்ரம்மாண்ட, சிவ.

**49. கேள்வி :** ப்ராம்மபுராணங்கள் எத்தனை?

**பதில் :** 2 ப்ரம்ம புராணம், பத்ம புராணம்.

**50. கேள்வி :** விஷ்ணுபுராணங்கள் எத்தனை?

**பதில் :** 4 ஸ்ரீமத் பாகவதம், நாரதம், கருட புராணம், விஷ்ணு புராணம்.

**51. கேள்வி :** ஸௌரபுராணத்தின் பெயர் என்ன?

**பதில் :** ப்ரம்மவைவர்த்த புராணம்.

**52. கேள்வி :** புராணம் பற்றி மேலும் ஏதேனும் கூறமுடியுமா ?

**பதில் :** நேபாலத்தில் இன்னும் 18 புராணங்கள் உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

(தொடரும்)